## 'மெய்' இறுதிச் சொற்கள்

மண் + பெரிது = மண் பெரிது
கண் + சிறிது = கண் சிறிது
எவர் + பெரியவர் = எவர் பெரியவர்
செய் + குன்றம் = செய் குன்றம்
குளிர் + காலம் = குளிர் காலம்
பயிர் + செய்தான் = பயிர் செய்தான்
நீர் + பாய்ச்சிஞன் = நீர் பாய்ச்சிஞன்
நீர் + குடித்தான் = நீர் குடித்தான்
சிறுவர் + தாய் = சிறுவர் தாய்
அவர் + தலை = அவர் தலை

## 9. பல்வகைச் சொற்புணர்ச்சி

### உயிரீற்றுப் புணர்ச்சி

அ + உயிர் = அவ்வுயிர்
அ + வழி = அவ்வழி
அ + யானை = அவ்யானை
பல + அணி = பலவணி
பல + ஆண்டு = பல்லாண்டு
சில + ஆடு = சிலவாடு
சில + சில = சிலசில, சிலச்சில, சிற்சில
பல + பல = பலபல, பலப்பல, பற்பல
சில + கலை = சில்கலை
சில + மலை = சின்மலை
பல + படை = பல்படை
பல + நாள் = பன்னாள்
நிலா + ஒளி = நிலாவொளி
இ + எடு = இவ்வேடு
இ + மாடு = இம்மாடு
செடி + உலர்ந்தது = செடியுலர்ந்தது
உரி + உப்பு = உரியஉப்பு
நாழி + உரி = நாடுரி
கிளி + அழகு = கிளியழகு
புளி + கறி = புளிங்கறி
புளி + சோறு = புளிஞ்சோறு
புளி + தயிர் = புளிந்தயிர்
நீ + எடு = நீயெடு
அது + இயற்றியவர் = அஃதியற்றியவர்
அது + அன்றி = அஃதன்றி
இது + ஆவது = இஃதாவது
('அது,' 'இது' என்ற சொற்களின் பின் உயிர் வரின் மட்டும் அஃது, இஃது என்று திரியும். 'அதுவன்றி' என்பதும், 'அஃது மரம்' என்பதும் தவறாகும்.)

திரு + அடி = திருவடி
பூ + எடு = பூவெடு
எ + ஆடை = எவ்வாடை
சே + அடி = சேவடி
தே + ஆலயம் = தேவாலயம்
ஒரே + இடம் = ஒரேயிடம்
நீயே + அறிவாய் = நீயேயறிவாய்
அவனே + ஆடினன் = அவனேயாடினன்
கை + நெகிழ = கைந்நெகிழ
கை + மாறு = கைம்மாறு
இனிமை + சொல் = இன்சொல்
சிறுமை + ஒலி = சிற்றொலி
பெருமை + ஒலி = பேரொலி
பசுமை + கூழ் = பைங்கூழ்
கருமை + குதிரை = கருங்குதிரை
செம்மை + சொல் = செஞ்சொல்
செம்மை + நிறம் = செந்நிறம்
தண்மை + நீர் = தண்ணீர்
வெண்மை + நிறம் = வெண்ணிறம்
வெம்மை + நீர் = வெந்நீர்
வாழை + இலை = வாழையிலை
பனை + ஓலை = பனையோலை
ஆவிரை + வேர் = ஆவிரம் வேர்
கோ + இல் = கோயில், கோவில்
அதுவோ + இது = அஃதோவிது

### மெய்யீற்றுப் புணர்ச்சி

படம் + காட்சி = படக்காட்சி
மண் + குடம் = மட்குடம்
மண் + தாழி = மட்டாழி
கண் + நீர் = கண்ணீர்
தூண் + நெடிது = தூணெடிது

விண் + உலகு = விண்ணுலகு

விண் + நாடு = விண்ணாடு

அறம் + உரை = அறவுரை

மரம் + குறிது = மரங்குறிது

அரம் + சிறிது = அரஞ்சிறிது

மரம் + தழைக்கும் = மரந்தழைக்கும்

மரம் + அழகிது = மரமழகிது

மரம் + வேர் = மரவேர்

சிவம் + பதவி = சிவபதவி

பரம் + நெறி = பரநெறி

நிலம் + வரி = நிலவரி

தீம் + சொல் = தீஞ்சொல்

பவளம் + இதழ் = பவளவிதழ்

செய் + நன்றி = செய்ந்நன்றி

மெய் + நிகழ்ச்சி = மெய்ந்நிகழ்ச்சி

பொய் + மை = பொய்ம்மை

மெய் + மை = மெய்ம்மை

வாணிகர் + தெரு = வாணிகத் தெரு

வேளாளர் + வீதி = வேளாளர் வீதி

வேல் + அழகு = வேலழகு

அல் + திணை = அஃறிணை

கல் + பலகை = கற்பலகை

கல் + நெஞ்சம் = கன்னெஞ்சம்

பல் + பொடி = பற்பொடி; பல் பொடி (பலபொடி)

கல் + தரை = கற்றரை

கல் + தூண் = கற்றூண்

கல் + மலை = கன்மலை

கால் + நான்கு = காணான்கு

முதல் + முதல் = முதன்முதல்

வாழ் + நன் = வாணன்

மகிழ் + நன் = மகிணன்

கள் + குடம் = கட்குடம்

புள் + பறந்தது = புட்பறந்தது

உள் + புறம் = உட்புறம்

என் + நெய் = எண்ணெய்

வெள் + நெய் = வெண்ணெய்

பனங்கள் + நன்று = பனங்க ணன்று

ஆள் + நலம் = ஆணலம்

வேள் + யாவன் = வேளியாவன்

நாள் + தோறும் = நாடோறும்

ஊர்கள் + தோறும் = ஊர்கடோறும்

பொன் + கலம் = பொற்கலம்

பொன் + பணி = பொற்பணி

பொன் + தோடு = பொற்றோடு

பொன் + நன்று = பொன்னன்று

பொன் + அழகு = பொன்னழகு

தன் + நலம் = தன்னலம்
(தம் + நலம் = தந்நலம்)

முன் + நாள் = முன்னாள்
(மூன்று + நாள் = மூந்நாள்)
[மூன்று + நீர் = மூந்நீர் (கடல்)]

தேன் + மொழி = தேன்மொழி, தேமொழி

தேன் + குழம்பு = தேன்குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு

தன் + பகை = தற்பகை

தன் + செயல் = தற்செயல்

என் + தந்தை = என்றந்தை, எந்தை

என் + கு = எனக்கு, எற்கு

அவன் + கு = அவனுக்கு, அவற்கு
(அவர் + கு = அவருக்கு)

சோழன் + நாடு = சோழநாடு

சிவன் + பெருமான் = சிவபெருமான்

கபிலன் + பரணன் = கபில பரணர்

வடுகன் + நாதன் = வடுகநாதன்

சேரன் + சோழன் + பாண்டியன் = சேர சோழ பாண்டியர்

குமரன் + கோட்டம் = குமர கோட்டம்

முருகன் + கடவுள் = முருகக் கடவுள்
கந்தன் + வேள் = கந்தவேள்
சுப்பிரமணியன் + முதலியார் = சுப்பிரமணிய முதலியார்
தியாகராசன் + செட்டியார் = தியாகராசச் செட்டியார்

## மென்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி

குரங்கு + மனம் = குரங்குமனம்
குரங்கு + குட்டி = குரங்குக் குட்டி, குரக்குக் குட்டி
மருந்து + பை = மருத்துப்பை
இரும்பு + பாதை = இருப்புப் பாதை
சுரும்பு + நாண் = சுருப்புநாண்
கரும்பு + வில் = கருப்புவில்
கரும்பு + சாறு = கருப்பஞ்சாறு
அன்பு + தளை = அற்புத்தளை
என்பு + உடம்பு = எற்புடம்பு
இரும்பு + நெஞ்சம் = இருப்பு நெஞ்சம்
கன்று + ஆ = கற்றா

## நெடில்தொடர், உயிர்த் தொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சி

கூடு + புழு = கூட்டுப் புழு
மூடு + பூச்சி = மூட்டுப் பூச்சி
ஆடு + மந்தை = ஆட்டு மந்தை
வீடு + பூனை = வீட்டுப் பூனை
ஆறு + ஓரம் = ஆற்றோரம்
நீறு + பை = நீற்றுப்பை
சோறு + வளம் = சோற்றுவளம்
முரடு + மனிதன் = முரட்டு மனிதன்
எருது + மாடு = எருத்துமாடு
களிறு + யானை = களிற்றியானை
கயிறு + கட்டில் = கயிற்றுக் கட்டில்
இணறு + நீர் = இணற்றுநீர்
வயிறு + நோய் = வயிற்று நோய்
சிறு + ஊர் = சிற்றூர்

## பூ, காய், மரப்பெயர்

பூ + கொடி = பூங்கொடி
பூ + சோலை = பூஞ்சோலை
பூ + தாது = பூந்தாது
தாழை + பூ = தாழம்பூ
முல்லை + தொடை = முல்லையந் தொடை
விள + காய் = விளங்காய், விளாங்காய்
மா + காய் = மாங்காய்
புளி + காய் = புளியங்காய்
தெங்கு + காய் = தேங்காய்
புன்கு + காய் = புன்கங்காய்
வேம்பு + காய் = வேப்பங்காய்
எலுமிச்சை + காய் = எலுமிச்சங்காய்
மாதுளை + காய் = மாதுளங்காய்
பனை + காய் = பனங்காய்
பனை + அட்டு = பனாட்டு
வழுதுணை + காய் = வழுதுணைக் காய், வழுதுணங்காய்
புன்னை + மரம் = புன்னைமரம்

## காலப் பெயர்

பண்டு + காலம் = பண்டைக் காலம்
முந்து + வளம் = முந்தைவளம்
அன்று + கூலி = அற்றைக் கூலி
இன்று + நாள் = இற்றைநாள்
இன்று + பொழுது = இற்றைப் பொழுது
மறு + நாள் = மறுநாள், மற்றை நாள்
நேற்று + பொழுது = நேற்றைப் பொழுது

**திசைப் பெயர்**

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
மேற்கு = வடமேற்கு
திசை = வடதிசை
காற்று = வடகாற்று
கிழக்கு + பால் = கீழ்பால்
திசை = கீழ்த்திசை
காற்று = கீழ்க் காற்று,
கீழ்காற்று
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு
மேற்கு = தென்மேற்கு
மலை = தென்மலை
மேற்கு + கடல் = மேல்கடல்
திசை = மேற்றிசை,
மேலைத்திசை
குடக்கு + திசை = குடதிசை
குணக்கு + கடல் = குணகடல்

**எண்ணுப் பெயர்**

ஒன்று + கோடி = ஒரு கோடி
ஆயிரம் = ஓராயிரம்
(உயிர்மெய்க்கு முன் ஒரு என்றும், உயிர்க்கு முன் ஓர் என்றும் வருதல் வேண்டும்.)
இரண்டு + கோடி = இருகோடி
ஆயிரம் = ஈராயிரம்
(உயிர்மெய்க்கு முன் இரு என்றும், உயிர்க்கு முன் ஈர் என்றும் வருதல் வேண்டும்.)
மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
நீர் = முந்நீர்
நாழி = முந்நாழி
கடல் = முக்கடல்
நான்கு + ஆயிரம் = நாலாயிரம்
யானை = நால்யானை
மணி = நான் மணி
கால் = நாற்கால்
திசை = நாற்றிசை

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
மூன்று = ஐம்மூன்று
கால் = ஐங்கால்
புலம் = ஐம்புலம்
ஆறு + ஆயிரம் = ஆறாயிரம்
கால் = அறுகால்
மாடு = அறுமாடு
வீடு = அறுவீடு
ஏழு + ஆயிரம் = ஏழாயிரம்
கடல் = எழுகடல்
ஏழ்கடல்
மாடு = எழுமாடு
வகை = எழுவகை
எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
கடல் = எண்கடல்
வளையல் = எண்வளையல்
ஒன்பது + பத்து = தொண்ணூறு
ஒன்பது + நூறு = தொள்ளாயிரம், தொளாயிரம்
ஒன்று + பத்து = ஒருபது
இரண்டு + பத்து = இருபது
மூன்று + பத்து = முப்பது
நான்கு + பத்து = நாற்பது
ஐந்து + பத்து = ஐம்பது
ஆறு + பத்து = அறுபது
ஏழு + பத்து = எழுபது
எட்டு + பத்து = எண்பது
ஒருபது + ஒன்று = ஒருபத்தொன்று, (பதினொன்று)
இருபது + இரண்டு = இருபத்திரண்டு
முப்பது + மூன்று = முப்பத்துமூன்று
பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + இரண்டு = பன்னிரண்டு
பத்து + மூன்று = பதின்மூன்று
பத்து + நான்கு = பதினான்கு
ஆயிரம் = பதினாயிரம்
கலம் = பதின்கலம்
மடங்கு = பதின்மடங்கு

ஒன்பது + ஆயிரம் = ஒன்பதி ஞாயிரம்
கலம் = ஒன்பதின்கலம்
ஒன்று + ஒன்று = ஒன்றொன்று,
= ஒவ்வொன்று,
ஒரோவொன்று
இரண்டு + இரண்டு =
ஈரிரண்டு, இரண்டிரண்டு
மூன்று + மூன்று = மும்
மூன்று

நான்கு + நான்கு = நந்நான்கு
ஐந்து + ஐந்து = ஐவைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு
ஏழு + ஏழு = எவ்வேழு
எட்டு + எட்டு = எவ்வெட்டு
ஒன்பது + ஒன்பது = ஒவ்வொன்பது
பத்து + பத்து = பப்பத்து
நூறு + பத்து = நூற்றுப்பத்து
நூறு + ஆயிரம் = நூறாயிரம்

---

## 10. ஒருமை பன்மைப் பெயர்கள்

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| புறா | புறாக்கள் | மரம் | மரங்கள் |
| கிளி | கிளிகள் | பல் | பற்கள் |
| செடி | செடிகள் | நாள் | நாள்கள் |
| மந்திரி | மந்திரிகள், மந்திரிமார் | நாய் | நாய்கள் |
| | | சுவர் | சுவர்கள் |
| தோழி | தோழியர், தோழிமார் | தாய் | தாயர் |
| | | தந்தை | தந்தையர் |
| தேனீ | தேனீக்கள் | அண்ணன் | அண்ணன்மார் |
| உடு | உடுக்கள் | நண்பன் | நண்பர் |
| வீடு | வீடுகள் | தோழன் | தோழர் |
| வண்டு | வண்டுகள் | வீட்டான், வீட்டாள் | வீட்டார் |
| பெரியது | பெரியவை, பெரியன | | |
| | | நல்லவன், நல்லவள் | நல்லவர் |
| சிறியது | சிறியவை, சிறியன | நாட்டான் | நாட்டார் |
| எழுத்து | எழுத்துக்கள் | யாது | யாவை |
| கருத்து | கருத்துக்கள் | மற்றது | மற்றவை |
| முத்து | முத்துக்கள் | அவன், அவள் | அவர் |
| வாக்கு | வாக்குக்கள் | எவன், எவள் | எவர் |
| காப்பு | காப்புக்கள் | அது | அவை |
| தோப்பு | தோப்புகள் | இது | இவை |
| (தோப்புக்கள் = தோப்பின்கள்) | | எது | எவை |
| கீற்று | கீற்றுக்கள் | யாது | யாவை |
| தெரு | தெருக்கள் | தன் | தம் |
| பூ | பூக்கள் | தான் | தாம் |

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| என் | எம் | யான் | யாம் |
| எனக்கு | எமக்கு | என்னால் | எம்மால் |
| என்னை | எம்மை | என்னிடம் | எம்மிடம் |
| உன்னை | உம்மை | பிறன், பிறள் | பிறர் |
| நின்னை | நும்மை | யாவன், யாவள் | யாவர் |

## 11. வடசொல் தமிழ்ச்சொல்லாகத் திரியும் வகை

| வடசொல் | தமிழ்ச்சொல் | வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| ஜ : | | ஸ்வர்க்கம் | சுவர்க்கம், |
| ஜநகன் | சனகன் | | சொர்க்கம் |
| பங்கஜம் | பங்கயம் | புஸ்தகம் | புத்தகம் |
| ஜாதி | சாதி | பஸ்பம் | பற்பம் |
| ப்ரயோஜனம் | பிரயோசனம் | ஸக்தி | சத்தி |
| பூஜா | பூசை | ஸப்தம் | சத்தம் |
| ராஜ்யம் | இராச்சியம் | ஹ : | |
| ஜ்யோதி | சோதி | ஹிமாலயம் | இமாலயம் |
| ஜ்ஞானம் | ஞானம் | ரோஹிணி | உரோகிணி |
| ஷ : | | மஹிமை | மகிமை |
| ஷண்முகம் | சண்முகம் | க்ஷ : | |
| பொக்கிஷம் | பொக்கிசம் | க்ஷணம் | கணம் |
| மகிஷி | மகிசி | பக்ஷணம் | பட்சணம் |
| பாஷை | பாடை | பக்ஷி | பட்சி |
| ரிஷி | இருடி | அக்ஷரம் | அச்சரம் |
| கிருஷ்ணன் | கிருட்டிணன் | | அக்கரம், |
| புஷ்பம் | புட்பம் | க்ஷேமம் | சேமம் |
| கஷ்டம் | கட்டம் | லக்ஷ்மி | இலக்குமி |
| ஸ : | | தீக்ஷா | தீக்கை |
| ஸபா | சபா | பிக்ஷா | பிச்சை |
| வாஸம் | வாசம் | யந்திரம் | இயந்திரம் |
| உத்ஸவம் | உற்சவம் | யூகி | ஊகி |
| தபஸ் | தபசு | தர்மம் | தருமம் |
| ஸரஸ்வதி | சரசுவதி | கர்னன் | கன்னன் |
| ஸ்வாமி | சுவாமி, சாமி | அல்பம் | அற்பம் |
| ஸ்நேகம் | சிநேகம் | த்ராவகம் | திராவகம் |
| ஸ்தானம் | தானம் | புண்யம் | புண்ணியம் |
| ஸ்வதேசி | சுதேசி | வம்சம் | வமிசம் |

## 12. ஊர்ப்பெயர் திரியும் வகை

| | | | |
|---|---|---|---|
| அம்பாசமுத்திரம் | அம்பை | தஞ்சாவூர் | தஞ்சை |
| உறையூர் | உறந்தை | திருச்சிராப்பள்ளி | திருச்சி |
| கருந்தட்டாங்குடி | கரந்தை | திருச்செந்தூர் | செந்தில் |
| கரிவலம்வந்த நல்லூர் | கருவை | திருநெல்வேலி | நெல்லை |
| | | திருவாவடுதுறை | துறைசை |
| காஞ்சிபுரம் | காஞ்சி, கச்சி | தொண்டைமான் நாடு | தொண்டைநாடு |
| கும்பகோணம் | குடந்தை | | |
| குலசேகரன் பட்டினம் | குலசை | நாகபட்டினம் | நாகை |
| | | புதுச்சேரி | புதுவை |
| கைலாயம் | கைலை | பூவிருந்தவல்லி | பூந்தமல்லி |
| கோயம்புத்தூர் | கோவை | பாண்டியன் நாடு | பாண்டிநாடு |
| செங்கல்பட்டு | செங்கை | மயிலாப்பூர் | மயிலை |
| சென்னபட்டினம் | சென்னை | விருதுநகர் | விருதை |
| சோழன் நாடு | சோணாடு | வீரவநல்லூர் | வீரை |

---

## 13. தன்வினை பிறவினையாகும் வகை

| தன்வினை | பிறவினை | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|
| நட | நடப்பி | தோன்று | தோற்று |
| கிட | கிடத்து | உண் | உண்பி, ஊட்டு |
| தா | தருவி | பூண் | பூட்டு |
| இரு | இருத்து | காண் | காட்டு |
| புகு | புகுத்து | காய் | காய்ச்சு |
| ஆடு | ஆட்டு | தேய் | தேய்ப்பி |
| கூடு | கூட்டு | அடர் | அடர்த்து |
| படி | படிப்பி | துயில் | துயிற்று |
| எழு | எழுப்பு | சுழல் | சுழற்று |
| உறு | உறுத்து | பயில் | பயிற்று |
| ஏறு | ஏற்று | பொருந்து | பொருத்து |
| ஆறு | ஆற்று | திருந்து | திருத்து |
| உருகு | உருக்கு | எழும்புக | எழுப்புக |
| எழுது | எழுதுவி | பழகு | பழக்கு |
| கருது | கருதுவி | விலகு | விலக்கு |
| அடங்கு | அடக்கு | புரள் | புரட்டு |
| இயங்கு | இயக்கு | உருள் | உருட்டு |
| முழங்கு | முழக்கு | தாழ் | தாழ்த்து |
| நீந்து | நீத்து | திரும்பு | திருப்பு |

## 14. சொற்றொடர்ப் பிழைகளும் திருத்தங்களும்

| பிழை | திருத்தம் |
|---|---|
| ௧. தெருவில் இரண்டு நாய்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தது. | ...சண்டையிட்டுக்... டிருந்தன. |
| ௨. கழுதைகள் வேகமாக ஓடாது. | ...ஓடா. |
| ௩. இங்கே வந்தவன் அவனல்ல. | ...அவனல்லன். |
| ௪. நான் தந்த புத்தகம் இதுவல்ல. | ...இஃதன்று. |
| ௫. இதனைச் செய்தவர் அவர் அல்லவா? | ...அல்லரா? |
| ௬. அந்த மரங்கள் பார்வைக்குச் சிறியதாய் இருக்கும். | ...சிறியனவாய்... |
| ௭. நாகநாட்டரசர் தன் குடிகளிடம் அன்பாய் இருந்தார். | ...தம் குடிகளிடம். |
| ௮. மாணாக்கர் தான் படிப்பதற்குப் புத்தகங்களைக் கேட்டார் | ...தாம் படிப்பதற்குப்... |
| ௯. எனது மாணவனது கட்டுரைகளைத் திருத்தினேன். | ...என் மாணவனுடைய கட்டுரைகளை. |
| ௧௦. நாகன் தனது பையனைக் கூப்பிட்டான். | ...தன்னுடைய அல்லது ...தன் பையனைக் |
| ௧௧. என் தோட்டத்தில் ஒரு மாமரமொன்று. | ...ஒரு மாமரம் அல்லது மாமர மொன்று |
| ௧௨. அங்கே பல அறிஞர்கள் பேசினார்கள். | ...அறிஞர் பலர் |
| ௧௩. அவன் எனது புத்தகங்களை எடுத்தான். | ...என்னுடைய அல்லது என் புத்தகங்களை |
| ௧௪. அங்கே என் புத்தகம் உள. | ...உளது அல்லது உண்டு. |
| ௧௫. கண்ணன் கல்வி யறிவு ஒழுக்கத்திற் சிறந்தவன். | ...கல்வி யறிவு ஒழுக்கங் களிற்... |
| ௧௬. நாகனும் நாயும் ஓடின. | ...ஓடினார்கள் |
| ௧௭. அவருடைய நல்ல பண்புகளையெல்லாம் நம்மதாக்கிக் கொள்ளுதல். | நம்மவையாக்கிக் கொள்ளுதல் |

அப்பர் அச்சகம், சென்னை-1. (III/2)

வெளியீடு : எ

ஓம்

தமிழ்நாட்டுப்

# பழமொழி அகரவரிசைச் சுருக்கம்

★

இடநோக்கிப் பழமொழி அமைத்துப்
பொருள் சிறக்கப் பேசவும் எழுதவும்
உதவி செய்வது

★

தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்
சென்னை - 1.
1980

# முன்னுரை

நம் இனிய தமிழ்மொழியில் பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்றிய செய்யுள்களிலும், பிற் காலப் புலவர்பெருமக்கள் எழுதிய உரைநடை நூல்களிலும், பேச்சு வழக்கிலும் ஆயிரக் கணக்கான **பழமொழிகள்** வழங்கப்பெறுகின்றன. அவற்றுள் திருத்தமான மிகு பயனுடைய பழமொழிகளில் ஏறக்குறைய ஓராயிர மட்டும் எடுத்து அகரவரிசைப்படுத்தி இதன்கண் வெளியிட்டிருக்கின்றோம்.

பொருள்நயம் சிறந்து விளங்க உரை நடை எழுத விரும்புவார்க்கும், கேட்டார்ப் பிணிக்கும் வகையில் பேச விழைவார்க்கும் இப் பழமொழிகள் பெருந்துணை புரியும்.

இந்நூல் மாணக்கர்கட்கும், பொதுவாகத் தமிழ்மக்கள் அனைவர்க்கும் பயன்படுவதாகு மென்பதில் ஐயமில்லை. மிகவும் எளிய விலைக்குக் கிடைக்கப் பெறும் இந் நூற்படிகளைப் பள்ளிக் கூட ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை வாங்குமாறு தூண்டியும், தமிழ்ச் செல்வர்கள் நூற்றுக்கணக்காக வாங்கித் தமிழ்மக்கட்கு விலையின்றி வழங்கியும் எம்மை ஊக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார்.**

அப்பர் அச்சகம், சென்னை - 600 001. (I1/2)

ஓம்

## தமிழ்நாட்டுப்

# பழமொழி அகரவரிசைச் சுருக்கம்

---

### அ

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
அகல இருந்தால் நீள உறவு, கிட்ட வந்தால் முட்டப் பகை
அகல உழுகிறதை விட ஆழ உழு
அகல் வட்டம் பகல் மழை
அசைந்து தின்கிறது யானை, அசையாமல் தின்கிறது வீடு ௫
அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்
அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
அடக்கமே பெண்ணுக்கு அழகு
அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதார் கல்லார் ௧௦
அடாது செய்தவன் படாது படுவான்
அடிசெய்கிறது அண்ணன் தம்பி செய்யார்
அடிநாக்கிலே நஞ்சும் நுனிநாக்கிலே அமுதமும்
அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்
அடியாத மாடு படியாது ௧௫
அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக் காரனுக்கு இரைச்சல் இலாபம்
அணில் கொம்பிலும், ஆமை கிணற்றிலும்
அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது
அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு
அந்தி மழை அழுதாலும் விடாது ௨௦
அப்பன் அருமை மாண்டால் தெரியும்
அப்பியாச வித்தைக்கு அழிவில்லை
அயலூரானுக்கு ஆற்றோரம் பயம், உள்ளூரானுக்கு மரத்தடியில் பயம்
அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்
அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர் ௨௫
அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி
அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக்கட்டி மூன்றுவேண்டும்
அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது

அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை
அரைக்காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம்பொன் கொடுத்தாலும் வாராது ௩௦
அரைக்காசுக்குக் குதிரை வாங்கவும் வேண்டும் ஆற்றைக் கடக்கப் பாயவும் வேண்டும்
அலை எப்பொழுது ஓழியும், தலை எப்பொழுது முழுகுகிறது
அல்லல் ஒருகாலம், செல்வம் ஒருகாலம்
அல்லற்பட்டு அழுத கண்ணீர் செல்வத்தைக் குறைக்கும்
அவசரக்காரனுக்கு (ஆத்திரக்காரனுக்கு)ப் புத்தி மட்டு ௩௫
அவப்பொழுதிலும் தவப்பொழுது நல்லது
அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்கிறாள்
அவளுக்கிவள் எழுந்திருந்து உண்பாள்
அவள்பேர் கூந்தலழகி அவள் தலை மொட்டை
அவன் அவன் செய்தவினை அவன் அவனுக்கு ௪௦
அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது
அழகிருந்தென்ன, அதிட்டம் இருக்கவேணும்
அழகுக்கு அணிந்த ஆபரணம் ஆபத்துக் குதவும்
அழக்கொண்ட வெல்லாம் அழப்போம்
அழச்சொல்லுவார் தமர், சிரிக்கச்சொல்லுவார் பிறர் ௪௫
அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன, கழுதை மேய்ந்தாலென்ன?
அழிவழக்குச் சொன்னவன் பழிபொறுக்கும் மன்னவன்
அழுகிற ஆணையும் சிரிக்கின்ற பெண்ணையும் நம்பக்கூடாது
அழுத பிள்ளை பால் குடிக்கும்
அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும் ௫௦
அழுவார் அற்ற பிணமும் ஆற்றுவார் அற்ற கடலையும்
அழையா வீட்டிற்கு நுழையாச் சம்பந்தி
அளகாபுரி கொள்ளையானாலும் அதிருட்டஈனனுக்கு ஒன்றுமில்லை
அளகேசன் ஆனாலும் அளவு அறிந்து செலவு செய்யவேண்டும்
அளக்கிற நாழி அகவிலை அறியுமா?
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
அறச் செட்டு முழு நட்டம்
அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்
அறக்கப் பறக்கப் பாடுபட்டாலும் படுக்கப் பாயில்லை
அறத்தால் வருவதே இன்பம் ௬௦
அறப்படித்தவன் அங்காடி போனால், விற்கவும் மாட்டான் கொள்ளவும் மாட்டான்
அறமுறுக்கினால் அற்றும் போகும்
அறிஞர்க்கழகு அகத்துணர்ந்து அறிதல்
அறிந்தறிந்து செய்கிறபாவத்தை அழுதழுது தொலைக்கவேண்டும்

அறிய அறியக் கெடுவார் உண்டா?
அறிவில்லார் சிநேகம் அதிக உத்தமம்
அறிவீனர் தமக்கு ஆயிரம் உரைக்கினும் அவம்
அறிவீன னிடத்தில் புத்தி கேளாதே
அறிவு இல்லார் தமக்கு ஆண்மையுமில்லை
அறிவுடையாரை அரசனும் விரும்பும் ௭௦
அறுபத்து நாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும், அடியிலிறங்கித் தான் தியாகம் வாங்கவேண்டும்
அறுப்புக் காலத்தில் எலிக்கு ஐந்து பெண்சாதி
அறையில் ஆடியல்லவோ அம்பலத்தில் ஆடவேண்டும்
அற்ப அறிவு அல்லற் கிடம்
அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும் ௭௫
அற்ப சகவாசம் பிராண சங்கடம்
அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான்
அற்றது பற்றெனில் உற்றது வீடு
அன்பற்ற மாமியாருக்கு கால்பட்டாற் குற்றம் கைபட்டாற் குற்றம்
அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறி ௮௦
அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்
அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா?
அன்று குடிக்கத் தண்ணீரில்லை ஆனைமேல் அம்பாரி வேணுமாம்
அன்னப்பாலுக்குச் சிங்கியடித்தவன் ஆவின்பாலுக்குச் சர்க்கரை தேடுகிறான்
அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகான் ௮௫
அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?

## ஆ

ஆகும் காய் பிஞ்சிலே தெரியும்
ஆகுங்காலம் மெய்வருந்த வேண்டாம், தேங்காய்க்கு இளநீர் போலச் சேருமே
ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறானா?
ஆங்காலம் ஆகும் போங்காலம் போகும்
ஆசை இருக்கிறது தாசில் பண்ண, அதிட்டம் இருக்கிறது கழுதை மேய்க்க ௯௦
ஆசைப்பட்ட பண்டம் ஊசிப் போயிற்று
ஆசை வெட்கம் அறியாது
ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்
ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும், பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கவேண்டும் ௯௫
ஆடிக்காற்றிலே அம்மி பறக்கச்சே இலவம்பஞ்சுக்கு எங்கே கதி?
ஆடிய காலும் பாடிய நாவும் சும்மா இரா

ஆடு கொடாத இடையன் ஆவைக் கொடுப்பானு?
ஆடு கொழுக்கிறதெல்லாம் இடையனுக்கு இலாபம்
ஆடு நனைகிறதென்று கோநாய் அழுகின்றதாம் ௧௦௦
ஆடை இல்லாதவன் அரை மனிதன்
ஆடை உடையான் அவைக் கஞ்சான்
ஆடையைத் தின்ருல் வெண்ணெய் உண்டா?
ஆபத்துச்குப் பாவமில்லை
ஆயிரம் காக்கைக்கு ஒருகல் ௧௦௫
ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்
ஆயிரம் பொன் பெற்ற குதிரைக்கு அரைப்பணத்துக்குச் சவுக்கு
ஆய்ச்சி நூற்கிறநூல் ஐயர் அரைஞாண் கயிற்றுக்குத்தான்
ஆய்ந்து பாராதான் காரியந் தான்சாந் துயரந் தரும் [காணும்
ஆரால் கேடு, வாயால் கேடு ௧௦௦
ஆரியக் கூத்தாடினுலும் காரியத்தில் கண்ணுயிரு
ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் (நாலடியார்) இரண்டும் (குறள்) சொல்லுக்குறுதி
ஆலை இல்லாத ஊரிலே இலுப்பைப்பூச் சர்க்கரை
ஆழமறியாமல் காலை இடாதே
ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலன்தரும்
ஆளனில்லாத மங்கைக்கு அழகு பாழ் ௧௧௫
ஆளுக்கு ஒரு குட்டுக் குட்டினுல் அடியேன் தலைமொட்டை
ஆள் கொஞ்சமாஞலும் ஆயுதம் மிடுக்கு
ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு
ஆறின கஞ்சி பழங் கஞ்சி ௧௨௦
ஆறு கடக்கிறவரையில் அண்ணன் தம்பி, ஆறு கடந்தால் நீயார் நானுர்?
ஆறுகெட நாணல் இடு, ஊருகெட நூலை விடு:
ஆறு போவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பு
ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன் ௧௨௫
ஆனைக்கு ஒருகாலம் பூனைக்கு ஒருகாலம்
ஆனைக்கும் அடிசறுக்கும்
ஆனை படுத்தால் ஆள் மட்டம்
ஆனை வரும்பின்னே மணி ஓசைவரும் முன்னே

## இ

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
இங்கே தலை காட்டுகிருன், அங்கே வால் காட்டுகிருன் ௧௩௦
இஞ்சி இலாபம் மஞ்சளில்
இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்

இடுகிறவள் தன்னவளானால் அடிப்பந்தியிலிருந்தா லென்ன, கடைப்பந்தியிலிருந்தா லென்ன?
இட்ட உறவு எட்டு நாளைக்கு நக்கின உறவு நாலு நாளைக்கு ( )
இட்டார் பெரியார் இடாதார் இழி குலத்தோர்
இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை
இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது
இரக்கப் போனாலும் சிறக்கப் போ
இரண்டு ஓடத்தில் கால் வைக்கிறதா? கசO
இரவற் சீலையை நம்பி இடுப்புக் கந்தையை எறியாதே
இராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை; இராச திசையிற் கெட்டவனுமில்லை
இராசா மகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்டுதான்
இராமனைப்போல் இராசா இருந்தால் அனுமானைப்போலச் சேவகனும் இருப்பான்
இருந்த கால் மூதேவி, நடந்த கால் சீதேவி கசரு
இருப்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இரா
இருவர் நட்பு ஒருவர் பொறை
இல்லற மல்லது நல்லற மன்று
இல்லாது பிறவாது அள்ளாது குறையாது
இழவுக்கு வந்தவள் தாலி யறுப்பாளா?
இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று
இளங்கன்று பயமறியாது
இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும்
இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை
இளைத்தவன் தலையில் ஈரும் பேனும் கருரு
இறங்கு பொழுதில் மருந்துக்குடி
இறுகினால் களி, இளகினால் கூழ்
இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப் பெருகும் பெருஞ்செல்வம்
இறைத்த கிணறு ஊறும், இறையாத கேணி நாறும்
இனம் இனத்தோடே; வெள்ளாடு தன்னோடே கசுO
இன்று இருப்பவர் நாளைக்கு இல்லை
இன்றைக்கு என்பதும் நாளைக்கு என்பதும் இல்லை என்பதற்கு அடையாளம்
இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்குக் குலை அறுப்பான்

## ஈ

ஈக்கு விடம் தலையில், தேளுக்கு விடம் கொடுக்கில்
ஈட்டி எட்டு முழம் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும் கசுரு
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
ஈர நாவிற்கு எலும்பில்லை

### உ

உடல் உள்ள வரையில் கடல் கொள்ளாத கவலை
உடும்பு போனால் போகிறது, கை வந்தால் போதும்
உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா கஎ0
உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை
உடைந்த சங்கு ஊதுதுப் பறியுமா?
உட்கார்ந்தல்லவோ படுக்கவேண்டும்?
உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத புலத்தில் நெல்லு
உண்டு கொழுத்தால் நண்டு வளையில் இராது கஎரு
உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்
உத்திராடத்தில் ஒரு பிள்ளையும், ஊர் வாரியில் ஒரு நிலமும்
உப்பிட்டவரை உள்ளளவும் நினை
உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா? கஅ0
உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை
உலோபிக்கு இரட்டைச் செலவு [தேவையில்லை
உழுகிற நாளில் ஊருக்குப் போனால், அறுக்கிற நாளில் ஆள்
உழுகிற (அல்லது நல்ல) மாடானால் உள்ளூரில் விலையாகாதா?
உழுவதன் கணக்குப் பார்த்தால் உழக்கேனும் மிஞ்சாது கஅரு
உளவு இல்லாமல் களவு இல்லை
உள்ளங்கைப் புண்ணுக்குக் கண்ணாடி ஏன்?
உள்ளது சொல்ல ஊருமல்ல; நல்லது சொல்ல நாடுமல்ல
உள்ளது போகாது இல்லது வராது
உள்ளம் தீயெரிய உதடு பழஞ்சொரிய ககூ0
உள்ளூரிலே விலைப்படாத மாடா அயலூரிலே விலைப்படும்?
உறவு போகாமல் கெட்டது கடன் கேட்காமல் கெட்டது.
உறியிலே (அல்லது கையிலே) வெண்ணெய் இருக்க நெய்க்
கலைவானேன்?

### ஊ

ஊசியைக் காந்தம் இழுக்கும்; உத்தமனைச் சிநேகம் இழுக்கும்
ஊணுக்கு முந்துவான் வேலைக்குப் பிந்துவான் ககூரு
ஊண் அற்றபோது உடலற்றது
ஊமை ஊரைக் கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்
ஊமையாய் இருந்தால் செவிடும் உண்டு
ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறான்
ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே உ00
ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
ஊர் உண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு
ஊர் வாயை மூட உலைமூடி இல்லை
ஊழி பெயரினும் ஊக்கமது கைவிடேல்

## எ

எங்கள் வீட்டுக்கு வந்தால் என்னகொண்டு வருகிறாய், உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன தருகிறாய்? ௨0௫
எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு உண்டு
எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா?
எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லக்கு
எடுத்துவிட்ட எருது எத்தனை நாள் உழைக்கும்?
எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டென்ன? ௨௧0
எட்டி பழுத்தென்ன, ஈயாதார் வாழ்ந்தென்ன?
எண் இல்லாதவர் கண் இல்லாதவர், எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர்
எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்
எண்ணிச் செய்கிறவன் செட்டி, எண்ணாமற் செய்கிறவன் மட்டி
எண்ணிச்செய்வது செட்டு, எண்ணாமற் செய்வது வேளாண்மை
எண்ணெய் முந்துதோ திரி முந்துதோ?
எதார்த்தவாதி வெகுசன விரோதி
எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்டாளம்
எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்கவேண்டும்
எத்தனை புடம் இட்டாலும் இரும்பு பசும்பொன் ஆகுமா? ௨௨0
எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்
எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காய் தெங்காகா
எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்
எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும் ௨௨௫
எரிகிற (அல்லது வேகிற) வீட்டில் பிடுங்கினது இலாபம்
எருமை வாங்குமுன்னே நெய்விலை கூறாதே
எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா?
எலி அழுதால் பூனை விடுமா?
எலி இருக்கிற இடத்தில் பாம்பு இருக்கும் ௨௩0
எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்
எவ்வளை யானாலும் தனிவளை வேண்டும்
எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா?
எல்லாருக்கும் ஓவ்வொன் றெளிது
எல்லாரும் பல்லக்கு ஏறினால் பல்லக்கைத் தூக்குகிறவர் யார்?
எழுதாக் கடனுக்கு அழுதால் தீருமா?
எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான் படித்தவன் பாட்டைக் கெடுத்தான்
எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்
எழுத்தறச் சொன்னாலும் பெண்புத்தி பின்புத்தி
எளியவன் பெண்டாட்டி எல்லார்க்கும் மதினி (மைத்துனி) ௨௪0

எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்
எள்ளு என்கிறதற்கு முன்னே எண்ணெய் கொண்டு வருகிறான்
எள்ளுக்கு ஏழு உழவு, கொள்ளுக்கு ஓர் உழவு
எறும்பு ஊரக் கல்லுந் தேயும்
எறும்புந் தன் கையால் எண் சாண் உ௬௫

## ஏ

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா?
ஏதென்று கேட்பாருமில்லை எடுத்துப் பிடிப்பாருமில்லை
ஏரி நிறைந்தால் கரை கசியும்
ஏருழுகிறவன் இளப்பமானால் எருது மச்சான்முறை கொண்டாடும்
ஏர்பிடித்தவன் என்னசெய்வான்? பானை பிடித்தவள் பாக்கியம்
ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல், செய்கிறவனுக்குத் தலைச்சுமை
ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்
ஏழை என்றால் எவர்க்கும் எளிது
ஏழைபேச்சு அம்பலம் ஏறாது
ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம் உ௬௬

## ஐ

ஐங்காயம் இட்டு அரைத்துக் கரைத்தாலும் தன் நாற்றம் போகாதாம் பேய்ச்சுரைக்காய்க்கு
ஐயமான காரியத்தைச் செய்தல் ஆகாது
ஐயர் வருகிற வரையில் அமாவாசை நிற்குமா?

## ஒ

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள்
ஒதிய மரம் தூணாமோ, ஒட்டாங் கிளிஞ்சல் காசாமோ? உ௬௭

ஒரு காசு பேணின் இரு காசு தேறும்
ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை
ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா?
ஒரு கை (அல்லது வெறுங்கை) முழம் போடுமா?
ஒரு நன்றி செய்தவரை உள்ள அளவும் நினை உ௬௮

ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைக்கவா?
ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்
ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லுதல்
ஒருமைப் பாடில்லாத குடி ஒருமிக்கக் கெடும்
ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம் (பரசியம்) உ௭0

ஒருவனாய்ப் பிறந்தால் தனிமை, இருவராய்ப் பிறந்தால் பகைமை
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று
ஒளிக்கப் போயும் தலையாரி வீட்டிலா !

ஓ

ஓசை பெறும் வெண்கலம் ஓசை பெறு மட்கலம்
ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்திலே இராசா, அகப்பட்டவனுக்கு அட்டமத்திலே சனி உஎரு
ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இலேசு
ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்
ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக்கடையில்
ஓர் ஊருக்கு ஒரு வழியா? உஅ0
ஓர் ஊர்ப்பேச்சு ஓர் ஊருக்கு ஏச்சு

ஔ

ஔவை சொல்லுக்கு அச்சம் இல்லை

க

கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா?
கசடறக் கல்லார்க்கு இசை உறல் இல்லை
கடலுக்குக் கரை போடுவார் உண்டா? உஅரு
கடலைத்தாண்ட ஆசையுண்டு கால்வாயைத் தாண்டக் கால்இல்லை
கடல் கொதித்தால் விளாவ நீர் ஏது?
கடல் திடலாகும், திடல் கடலாகும்
கடல்மீனுக்கு நீச்சுப் பழக்க வேண்டுமா?
கடவுளை நம்பினோர் கைவிடப் படார் உகூ0
கடன் இல்லாத கஞ்சி கால்வயிறு
கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான்; மரம் ஏறிக் கைவிட்டவனும் கெட்டான்
கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சந்நியாசி
கடிந்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை
கடுகத்தனை நெருப்பானாலும் போரைக் கொளுத்திவிடும் உகூரு
கடுகு (அல்லது மிளகு) சிறுத்தாலும் காரம் போகுமா?
கடுகு (அல்லது ஊசி) போன இடம் ஆராய்வார், பூசணைக்காய் போன இடம் தெரியாது
கடுங்காற்று மழை கூட்டும், கடுஞ்சிநேகம் பகை கூட்டும்
கடுஞ்செட்டுத் தயவைக் கெடுக்கும்
கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது ௩00
கட்டக் கரியமணி இல்லாமற் போனாலும் பேர் பொன்னம்மாள்

கட்டப்பாறையை விழுங்கிவிட்டுச் சுக்குநீர் (சுக்குக்கஷாயம்) குடித்தால் தீருமா?
கட்டிக்கொடுத்த சோறும் கற்றுக்கொடுத்த சொல்லும் எத்தனை நாள் நிற்கும்?
கட்டினவனுக்கு ஒரு வீடானால் கட்டாதவனுக்குப் பல வீடு
கட்டின வீட்டுக்கு எட்டு வக்கணை ௩0௫
கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தான் அறியான்
கணக்கன் கணக்கைத் தின்னுவிடில், கணக்கனைக் கணக்குத் தின்று விடும்
கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும்
கண் கண்டது கை செய்யும்
கண்குருடு ஆனாலும் நித்திரையில் குறையுமா? ௩௧0
கண் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா?
கண் கெட்ட பிறகா சூரிய வணக்கம்?
கண்டது கற்கப் பண்டிதனாவான்
கண்டதே காட்சி கொண்டதே கோலம்
கண்டது சொன்னால் கொண்டிடும் பகை ௩௧௫
கண்டால் ஒரு பேச்சு காணாவிட்டால் ஒரு பேச்சு
கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார் உண்டோ?
கண்ணிற் பட்டால் கரிக்குமா, புருவத்திற் பட்டால் கரிக்குமா?
கண்ணிற் புண் வந்தால் கண்ணாடி பார்த்தல் ஆகாது
கதிரவன் சிலரைக் காயேன் என்குமோ? ௩௨0
கதைக்குக் காலுமில்லை தலையுமில்லை
கத்தரிக்காய் வாங்கப் பூசணிக்காய் கொசுரா?
கந்தையானாலும் கசக்கிக் கட்டு கூழ் ஆனாலும் குளித்துக் குடி
கப்பல் ஏறிப் பட்ட கடன் கொட்டை நூற்று விடியும்?
கப்பற்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி, கப்பல் உடைந்தால் பிச்சைக்காரி ௩௨௫
கப்பற்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சு
கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்
கரணம் தப்பினால் மரணம்
கரிவிற்ற பணம் கறுப்பாய் இருக்குமா?
கருமத்தை முடிக்கிறவன் கட்டத்தைப் பாரான் ௩௩0
கருப்பு கசக்கிறது வாய்க் குற்றம்
கரும்பு தின்னக் கூலியா?
கரும்பை விரும்ப அது வேம்பாயிற்று
கரும்பு ருசியென்று வேரோடு பிடுங்கலாமா?
கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் ௩௩௫
கல்லடிச் சித்தன் போனவழி, காடுமேடெல்லாம் தவிடுபொடி
கல்லாடம் (ஒரு நூல்) படித்தவனோடு மல் ஆடாதே

கல்லாதவரே கண்ணில்லாதவர்
கல்லாதார் செல்வத்திலும் கற்ருர் வறுமை நலம்
கல்லுக்குள் தேரையைக் காப்பாற்றவில்லையா? ௯௪௦
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமா?
கல்லைக் கண்டால் நாயைக் காணும், நாயைக் கண்டால் கல்லைக் காணும்
கல்வி அழகே அழகு
கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லா அழகு
கல்வி கரையில கற்பவர் நாள் சில ௯௪௫
கல்விக் கிருவர், களவுக் கொருவர்
கவலை யுடையார்க்குக் கண்ணுறக்கம் வராது
கழுதை கெட்டால் குட்டிச்சுவர்
கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னாலும் அபயக்குரலே அன்றி அங்கொன்றுமில்லை
கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி? ௯௫௦
கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று
களை பிடுங்காப் பயிர் கால்பயிர்
கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதைவிடக் கற்பூரம் விற்றுக் கால்பணம் சம்பாதிப்பது மேல்
கள்ள மனம் துள்ளும்
கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று கூடினால் விடியு மட்டும் திருடலாம் ௯௫௫
கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது
கள்ளம் பெரிதோ? காப்பு பெரிதோ!
கள்ளிக்கு முள்வேலி இடுவானேன்!
கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்லுவான்
கறந்த பாலைக் காய்ச்சாமற் குடித்தால், காச வியாதி தானே ஏற்படும் ௯௬௦
கறையான் புற்று பாம்புக்கு உதவுகிறது
கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு
கற்பில்லாத அழகு வாசனை இல்லாத பூ
கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு ௯௬௫
கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா?
கனிந்த பழம் தானே விழும்

## கா

காகம் வலமானால் ஆயுசு விருத்தியாகும்
காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும் காற்றைப்போலப் பறக்கவும் வேண்டும் ௯௭௦

காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்
காடு வா என்கிறது வீடு போ என்கிறது
காட்டுக்கு எறித்த நிலாவும் கானலுக்குப் பெய்த மழையும்
காட்டு வாழை வந்தால் வீட்டு வாழ்வு போகும்
காட்டை வெட்டிச் சாய்த்தவனுக்குக் கம்பு பிடுங்கப் பயமா? ௩எ௫
காண ஒருதரம் கும்பிட ஒருதரமா?
காணி ஆசை கோடி கேடு
காணிக்குச் சோம்பல் கோடிக்கு வருத்தம்
காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே
காப்பு சொல்லும் கை மெலிவை ௩௮௦
காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்
காய்ச்சலும் கழிச்சலும் சேர்ந்துவிட்டால் நம்பப்படாது
காய்த்த மரம் கல் அடிபடும்
காய்ந்தும் கெடுத்தது பெய்துக் கெடுத்தது
காராம்பசுவுக்குப் புல்லுமாம் நந்தவனத்துக்குக் களையுமாம் ௩௮௫
காரியமாகும் வரையில் கழுதையையும் காலைப்பிடி
காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ?
கார்த்திகைக்குப் பின் மழையும் இல்லை, கர்ணனுக்குப்பின்
கொடையும் இல்லை
காலமே எழுந்திருந்து காக்கை பார்க்கிறது ஆகாது
காலம் செய்கிறது ஞாலம் செய்யாது
காலம் போம் வார்த்தை நிற்கும், கப்பல் போம் துறை நிற்கும்
காலுக்குத் தக்க செருப்பும், கூலிக்குத் தக்க உழைப்பும்
காலைக் கல்லு மாலைப் புல்லு
காலைச் சுற்றின பாம்பு கடியாமல் விடாது
காலை துயில்வானும் மாலை இருப்பானும் பதர் ௩௯௫
காலளவே ஆகுமாம் கப்பலின் ஓட்டம், நூலளவே ஆகுமாம் நுண்
[சீலை
காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்
காற்றில்லாமல் தூசி பறக்குமா?
காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்
காற்றுக்கு எதிரிலே துப்பினால் முகத்தில் விழும் ௪௦௦

கி

கிட்டாதாயின் வெட்டென மற
கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்ந்தான்
கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்

கீ

கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்
கீர்த்தியால் பசி தீருமா?
கீறி ஆற்றினால் புண் ஆறும் ௪௦௫

## கு

குங்குமம் சுமந்த கழுதை மணம் அறியுமா ?
குவனுக்கு ஆறுமாதம் தடிகாரனுக்கு அரை நாழிகை
குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்
குடி இருக்க வந்தாயோ கொள்ளிவைக்க வந்தாயோ ௪௧0
குடிஇருந்துபார், கூட்டுப்பயிர் இட்டுப்பார்
குடிக்கிறது கூழ், கொப்பளிக்கிறது பன்னீர்
குடி, சூது, விபசாரம் குடியைக் கெடுக்கும்
குடிவைத்த வீட்டில் கொள்ளி வைக்கலாமா ?
குடும்பத்தில் இளையவனும் கூத்தாடியில் கோமாளியும் ஆகாது
குட்டுப் பட்டாலும் மோதிரக் கையாலே குட்டுப்படவேண்டும்
குணத்தை மாற்றக் குருவில்லை
குணம் இல்லா வித்தையெல்லாம் அவித்தை
குணம் பெரிதேயன்றிக் குலம் பெரிதன்று
குதித்துக் குதித்து மாவிடித்தாலும் குந்தாணிக்கு ஒரு கொழுக்கட்டை கிடையாது ௪௨0
குதிரை இருப்பு அறியும், கொண்ட பெண்டாட்டி குணம்அறிவாள்
குதிரை ஏறாமல் கெட்டது, கடன் கேளாமல் கெட்டது
குதிரை குணமறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை
குதிரை குருடானாலும் கொள்ளு தின்கிறதில் குறையுமா?
குந்தி இருந்தது தின்றால் குன்றும் மாளும் ௪௨௫
குபேரன் பட்டணத்திலும் விறகுத் தலையன் உண்டு
குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறான்
குப்பை உயரும் கோபுரம் தாழும்
குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி நிறம் போகுமா?
கும்பி கூழுக்கு அழுகிறது; கொண்டை பூவுக்கு அழுகிறது ௪௩0
கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்கு
குரங்கின்கைப் பூமாலை
குரங்குக்குப் புத்திசொல்லித் தூக்கணாங்குருவி கூண்டு இழந்தது
குருஇலார்க்கு வித்தையுமில்லை முதல் இலார்க்கு ஊதியமில்லை
குருடனுக்கு வேண்டியது கோல் ௪௩௫
குருடனும் செவிடனும் கூத்துப்பார்க்கப்போய், குருடன் கூத்தைப் பழித்தான், செவிடன் பாட்டைப் பழித்தான்
குருட்டுக் கண்ணுக்கு குறுணி மையிட்டுமென்ன ?
குரு மொழி மறந்தோன் திருவழிந்து அழிவான்
குரைக்கிற நாய் வேட்டை பிடிக்குமா ?
குலம் குப்பையிலே, பணம் பந்தியிலே ௪௪0
குலவித்தை கற்றுப் பாதி, கல்லாமற் பாதி
குழந்தையும் தெய்வமும் கொண்டாடின இடத்திலே
குற வழக்கும் இடை வழக்கும் கொஞ்சத்தில் தீராது

குறைகுடம் தளும்பும், நிறைகுடம் தளும்பாது
குறையச் சொல்லி நிறைய அளை ௪௪௫
குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னும், குறும்பியுள்ள காது தினவு கொள்ளும்
குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை

**கூ**

கூரைமேலே சோறு போட்டால் ஆயிரம் காகம்
கூலியைக் குறைக்காதே வேலையைக் கெடுக்காதே?
கூழுக்கு மாங்காய் கொண்டாட்டம், குரங்குக்குத் தேங்காய் கொண்டாட்டம் ௪௫௦
கூழுக்கும் ஆசை, மாவுக்கும் (அல்லது மீசைக்கும்) ஆசை

**கெ**

கெடுக்கினும் கல்வி கேடுபடாது
கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது
கெடுவான் கேடு நினைப்பான்
கெட்டாலும் செட்டி செட்டியே, கிழிந்தாலும் பட்டு பட்டே ௪௫௫
கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும்
கெட்டும் பட்டணம் சேர்
கெண்டையைப் போட்டு வராலை இழு
கெரடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வித்தை என்பான்
கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கல்ல ௪௬௦

**கே**

கேடுவரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே
கேட்டதெல்லாம் நம்பாதே? நம்பினதெல்லாம் சொல்லாதே!
கேளும் கிளையுங் கெட்டோர்க்கு இல்லை
கேள்விப் பேச்சில் பாதிதான் நிசம்

**கை**

கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை ௪௬௫
கைக்கோளனுக்குக் காற்புண்ணும் நாய்க்குத் தலைப்புண்ணும் ஆறா
கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா ?
கைப்பொருளற்றால் கட்டினவளும் பாராள்
கையாளாத ஆயுதம் துருப்பிடிக்கும்
கையிலே காசு வாயிலே தோசை ௪௭௦
கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம் பேர்
கையில் பிடிப்பது துளசிமாலை. கக்கத்தில் இடுக்குவது கன்னக்கோலாம்
கையூன்றிக் கரணம் போடவேண்டும்

## கொ

கொசுவுக்கு அஞ்சிக் குடிபெயர்ந்து போகிறதா?
கொடிக்குக் காய் கனமா? ௪௭௫

கொடிசுற்றிப் பிறந்த பிள்ளை குலத்திற்கு ஆகாது
கொடுக்கிறவனைக் கண்டால் வாங்குகிறவனுக்கு இளக்காரம்
கொடுங்கோல் அரசு நெடுங்காலம் நில்லாது
கொடுத்ததைக் கேட்டால் அடுத்ததாம் பகை
கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியா? ௪௮0

கொண்டானும் கொடுத்தானும் ஒன்று, கலியாணத்தைக் கூட்டி வைத்தவன் வேறு
கொலைக்கஞ்சாதவன் பழிக்கஞ்சுவானா?
கொல்லன் தெருவில் ஊசி விலைபோமா?
கொல்லிக்காட்டு நரி சலசலப்புக் கஞ்சுமா?
கொள்ளிக்கு எதிர்போனாலும், வெள்ளிக்கு எதிர்போகலாகாது
கொற்றவன் தன்னிலும் கற்றவன் மிக்கோன்

## கோ

கோட் சொல்பவனைக் கொடுந் தேள் எனநினை
கோட் சொல்லும் வாய் காற்றுடன் நெருப்பு
கோணிக்கோடி கொடுப்பதிலும் கோணமைற் காணி கொடுப்பது நல்லது
கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு, பாத்திரமறிந்து பிச்சையிடு
கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு
கோபம் சண்டாளம்
கோயிற் பூனை தேவர்க் கஞ்சுமா?
கோழி மிதித்துக் குஞ்சு முடம் ஆகுமா?

கோளுஞ் சொல்லிக் கும்பிடுவானேன்? ௪௯௫

## கௌ

கௌவை சொல்லில் எவ்வர்க்கும் பகை

## ச

சண்டிக் குதிரைக்கு நொண்டிச் சாரதி
சத்தியமே வெல்லும், அசத்தியமே கொல்லும்
சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தாலதென்ன?
சந்தியிலே அடித்ததற்குச் சாட்சியா? ௫00

சபையிலே நக்கீரன் அரசிலே விற்சேரன்
சம்பளம் இல்லாத சேவகனும் கோபமில்லாத எசமானும்
சருகைக் கண்டு தணலஞ்சுமா?

சருக்கரை என்றால் தித்திக்குமா ?
சவதியில் (சேற்றில்) கல்லிட்டெறிந்தால் மேலே தெறிக்கும் ௫0௫
சனிப் பிணம் தனிப் போகாது
சன்மத்தால் சாதியோ, கன்மத்தால் சாதியோ

**சா**

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரமும் முழங்கால்
சாகிறவரைக்குஞ் சங்கடமானால் வாழுகிறது எக்காலம்?
சாகிறவரையில் வைத்தியன் விடான், செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன் ௫௧0
சாட்சிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்
சாட்டை அடியும் சவுக்கு அடியும் பொறுக்கலாம், மூட்டைப் பூச்சிக் கடியும் முணுமுணுப்பும் ஆகா
சாட்டை இல்லாப் பம்பரம் ஆட்டிவைக்க வல்லவன்
சாண் ஏற முழம் சறுக்குகிறது
சாது மிரண்டால் காடு இடங்கொள்ளாது ௫௧௫

சாத்திரம் பாராதவீடு சமுத்திரம், பார்த்த வீடு தரித்திரம்
சாத்திரம் பொய்யென்றால் கிரகணத்தைப் பார்
சாப்பிள்ளை பெற்றாலும் மருத்துவச்சிக் கூலி தப்பாது

**சி**

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்
சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் சீருஞ் சிறப்புங் கெடும்
சிநேகஞ் செய்யுமுன் ஆராய்தல் செய், செய்தபின் ஐயப்படாதே
சிந்தின வீட்டிலே சேராது மங்கின வீட்டிலே வாராது
சிரைத்தால் மொட்டை வைத்தால் குடுமி
சில்லரைக் கடன் சீரழிக்கும்
சிவனே என்றிருந்தாலும் தீவினை விடவில்லை ௫௨௫

சிறிய பாம்பானாலும் பெரிய தடிகொண்டடி
சிறியாரோடு இணங்காதே செம்புக்குப் புளிவிட்டுக் கடையாதே
சிறுகக் கட்டிப் பெருக வாழு
சிறு குழந்தை இல்லாத வீடும் வீடல்ல, சீரகம் இட்டு ஆக்காத கறியும் கறியல்ல ௫௩0

சிறு தீ பெரு நெருப்பு
சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்
சிறு மீன் எல்லாம் பெரு மீனுக்கு இரை
சிறுமையிற் கல்வி சிலைமேல் எழுத்து
சிறுமையும் பெருமையும் தான்தர வரும்
சிற்றாள் எட்டு ஆளுக்குச் சரி ௫௩௫

## சீ

சீ என்கிற வீட்டிலே பேயும் நுழையாது
சீரங்கத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவாய்மொழி கற்பிக்க வேண்டுமா?
சீரியர் கெட்டாலும் சீரியரே

## சு

சுக துக்கம் சுழல் சக்கரம்
சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும் ருச0
சுட்ட சட்டி அறியுமா அப்பத்தின் சுவையை?
சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா?
சுண்டைக்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்
சுத்தம் சோறு போடும் எச்சில் இரக்க வைக்கும்
சுத்த வீரனுக்கு உயிர் துரும்பு ருசரு
சும்மா இருக்கிற தம்பிரானுக்கு இரண்டு பட்டை
சும்மா கிடக்கிற சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி
சும்மா வந்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பாராதே
சுயபுத்தி போனாலும் சொற்புத்தி வேண்டாவா?
சுவரை வைத்துக் கொண்டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்?
சுவர்க்கத்திலே தோட்டியுஞ் சரி, தொண்டைமானுஞ் சரி
சுவாமி வரங் கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுக்கமாட்டான்

## சூ

சூடு கண்ட பூனை அடுப்பங் கரையில் சேராது

## செ

செக்களவு பொன்னிருந்தாலும் செதுக்கியுண்டால் எத்தனை நாளுக்குக் காணும்?
செடியிலே வணங்காதது மரத்திலே வணங்கும்? ருருரு
செட்டி மிடுக்கோ சரக்கு மிடுக்கோ?
செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்
செத்த ஆடு காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்
செத்தவன் உடைமை இருந்தவனுக்கு அடைக்கலம்
செய்வன திருந்தச் செய் ருசூ0
செய்யும் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கில் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை
செருப்பால் அடித்தாலும் திருட்டுக்கை நிற்காது
செருப்பின் அருமை வெயிலில் தெரியும், நெருப்பின் அருமை குளிரில் தெரியும்
செருப்புக்காகக் காலைத் தறிக்கிறதா?
செலவில்லாச் செலவு வந்தால் களவில்லாக் களவு வரும் ருசூரு

சென்மத்தில் பிறந்தது செருப்பா லடித்தாலும் போகாது
சென்ற இடம் எல்லாம் சிறப்பே கல்வி

### சே

சேராத இடத்திலே சேர்ந்தால் துன்பம் வரும்
சேற்றிலே புதைந்த யானையைக் காக்கையுங் கொத்தும்

### சை

சைகை அறியாதவன் சற்றும் அறியான்

### சொ

சொப்பனங் கண்ட அரிசி சோற்றுக்காகுமா?
சொல் அம்போ வில் அம்போ?
சொல்லாது பிறவாது அள்ளாது குறையாது
சொல்லாமற் செய்வார் நல்லோர், சொல்லியுஞ் செய்யார் கசடர்
சொல்லிப் போகவேணும் சுகத்துக்குச், சொல்லாமற் போகவேணும் துக்கத்துக்கு ருஎரு
சொல்லுகிறவனுக்கு வாய்ச்சொல், செய்கிறவனுக்குத் தலைச்சுமை
சொல்வல்லவனை வெல்லல் அரிது
சொறிந்து தேய்க்காத எண்ணெயும் பரிந்து இடாத சோறும் பாழ்
சொற்கேளாப் பிள்ளையினால் குலத்துக்கீனம்
சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை ருஅ0

### சோ

சோம்பலே சோறு இன்மைக்குப் பிதா
சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடே
சோற்றுக்குக் கேடு பூமிக்குப் பாரம்

### டி

டில்லிக்குப் பாச்சா (இராசா) என்றாலும் தல்லிக்குப் பிட்ட (பிள்ளை) தானே

### த

தங்கச்சி பிள்ளை தன் பிள்ளை ஆனால் தவத்துக்குப் போவான் ஏன்?
தங்கம் தரையிலே தவிடு பானையிலே
தஞ்சம் என்று வந்தவனை வஞ்சித்தல் ஆகாது
தடி எடுத்தவனெல்லாம் வேட்டைக்காரனா?
தட்டானுக்குப் பயந்தல்லவோ அணிந்தான்சிவன் சர்ப்பத்தையே
தட்டானும் செட்டியும் ஒன்றானால் தங்கம் கொடுத்தவன் வாயிலே மண் ருகூ0
தட்டிப்பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்
தணிந்த வில்லுத்தான் தைக்கும்
தண்ணீரிலே விளைந்த உப்புத் தண்ணீரிலே கரைய வேண்டும்

தண்ணீரையும் தாயையும் பழிக்கலாமா ?
தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும் ௫௯௫
தந்தை எவ்வழி புதல்வன் அவ்வழி
தப்பி உடையவன் படைக்கு அஞ்சான்
தருமம் தலை காக்கும்
தலை இடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்
தலை இருக்க வால் ஆடுமா ?
தலைக்குத்தலை பெரிய தனம், உலைக்கரிசியில்லை
தலைமேலோடின வெள்ளம் சாண் ஓடி என்ன, முழம் ஓடி என்ன
தலையின் எழுத்திருக்கத் தந்திரத்தால் வெல்லலாமா ?
தலையாரியும் அதிகாரியும் ஒன்றானால் சம்மதித்தபடி திருடலாம்
தவத்துக் கொருவர் கல்விக் கிருவர் ௬௦௫
தவளை தன் வாயாற் கெடும்
தவிட்டுக்கு வந்த கைதான் தங்கத்துக்கும் வரும்
தழைத்த மரத்துக்கு நிழலுண்டு, பிள்ளை பெற்றவளுக்கும் பாலுண்டு
தனக்கு என்று இருந்தால் சமயத்துக்கு உதவும்
தன் இச்சையை அடக்காவிட்டால் தன்னையே ஆளும் ௬௧௦
தன் இனம் தன்னைக் காக்கும், வேலி பயிரைக் காக்கும்
தன் உயிரைப்போல மன்னுயிரையும் நினை
தன் குற்றம் தனக்குத் தெரியாது
தன் நெஞ்சறியாத பொய்யில்லை தாயறியாத சூலில்லை
தன் பலம் கொண்டு அம்பலம் ஏறவேண்டும் ௬௧௫
தன் வாயாலே தான் கெட்டான்
தன் வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்
தன் வீட்டு விளக்கென்று முத்தம் இடலாமா ?
தன்னாலே தான் கெட்டால் அண்ணாவியார் என் செய்வார் ?
தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான் ௬௨௦

## தா

தாடி பற்றிக்கொண்டு எரியும்போது சுருட்டுக்கு நெருப்பு கேட்டாளாம்
தாட்சணியம் தன நாசம்
தாமதம் தாழ்வுக் கேது
தாம்பும் அறுதல் தோண்டியும் பொத்தல்
தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறே ௬௨௫
தாயைப் பார்த்துப் பெண்ணைக்கொள்ளு, பாலைப்பார்த்துப் பசுவைக் கொள்ளு
தாய்க்கு ஒளித்த சூலா ?
தாய்க்குப் பின் தாரம்
தாய் மனம் பித்து தகப்பன் மனம் கல்லு
தாய் வார்த்தை கேளாத பிள்ளை நாய் வாயிற் சீலை ௬௩௦
தாலியறுத்தவளுக்கு மருத்துவச்சி தயவு ஏன் ?

தாழ்ந்த இடத்திலே தண்ணீர் தங்கும்
தாழ்விலே பெருமையும் வாழ்விலே தாழ்மையும் வேண்டும்
தானே கனியாத பழத்தை தடிகொண்டடித்தால் கனியுமா ?
தான் ஆடாது போனாலும் தன் சதை ஆடும் ௬௩௫

தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது
தான் கள்ளன் பிறரை நம்பான்
தான் சாக மருந்து தின்பானா ?
தான் தேடாப் பொன்னுக்கு மாற்றும் இல்லை உரையும் இல்லை
தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் ௬௪௦

## தி

திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை
திங்களுஞ் சனியுந் தெற்கே நோக்கவேண்டும்
திட்டிக் கெட்டாரும் இல்லை, வாழ்த்தி வாழ்ந்தாரும் இல்லை
திருடனுக்குத் தோன்றும் கள்ளப்புத்தி
திருடனைப் பிடிக்கத் திருடனே வேண்டும் ௬௪௫

திருவேற உருவேறும்
திரைகடலோடியுந் திரவியம் தேடு

## தீ

தீட்டின மரத்திலே கூர் பார்க்கிறது
தீப்புண் ஆறும் வாய்ப்புண் ஆறாது
தீராக் கோபம் போராய் முடியும் ௬௫௦

## து

துட்டனைக் கண்டால் தூர விலகு
துட்டு வந்து பெட்டியில் விழுந்ததோ, திட்டு வந்து பெட்டியில் விழுந்ததோ ?
துணைபோனாலும் பிணை போகாதே
தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறது
துலாத்தில் வெள்ளி உலாத்தில் பெய்யும் மழை ௬௫௫

துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா ?
துறவிக்கு வேந்தன் துரும்பு
துன்பம் முந்தி' இன்பம் பிந்தி

## தூ

தூங்காதவனுக்குச் சுகமில்லை
தூங்குகிற நரிக்கு இரை கிடையாது ௬௬
தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி
தூற்றல் நின்றாலும் தூவானம் நில்லாது

தெ

தெய்வம் காட்டும்; ஊட்டுமா ?
தெற்கே அடித்த காற்றுத் திரும்பி அடியாதா?
தென்றல் மூற்றிப் பெருங்காற்றாகும் சுசுரு

தே

தேசங்கள் தோறும் பாஷைகள் (மொழிகள்) வேறு
தேசத்தோடொத்து வாழ்
தேய்த்தாலும் சந்தனக்கட்டை மணம் போகாது
தேளுக்குக் கொடுக்கில் விடம், தேவடியாளுக்கு உடம்பெங்கும் விடம்
தேள் நெருப்பில் விழுந்தால் எடுத்து விட்டவனைக் கொட்டும்
தேனுக்கு ஈயைப் பிடித்துவிட வேண்டுமா?
தேனே போலும் செந்தமிழ்க் கல்வி

தை

தை ஈனுப் புல்லும் இல்லை, மாசி ஈனு மரமும் இல்லை
தை மழை நெய் மழை
தையல் சொற் கேட்டால் எய்திடும் கேடு சுஎஇ

தொ

தொடையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகிறதா ?
தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வாராது

தோ

தோட்டக்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சு
தோட்டிபோல் உழைத்துத் துரைபோல் சாப்பிடவேண்டும் சுஅ
தோழனுவது துலங்கிய கல்வி
தோன்றின யாவும் அழியும்

ந

நகத்தாலே கிள்ளுகிறதைக் கோடரி கொண்டு வெட்டுகிறான்
நடக்க அறியாதவனுக்கு நடுவீதி காதவழி
நடந்தால் நாடெல்லாம் உறவு, படுத்தால் பாயும் பகை சுஅ௯
நட்டுவன் பிள்ளைக்குக் கொட்டிக் காட்ட வேண்டுமா !
நண்டு கொழுந்தால் வளையில் இராது; தண்டு கொழுத்தால் தரையில் இராது
நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும்
நமக்காகாதது நஞ்சோடொக்கும்
நமனுக்கு நாலு பிள்ளை கொடுத்தாலும் உற்றாருக்கு ஒரு பிள்ளை கொடுக்க மாட்டான் சுகூ
நமன் அறியாத உயிரும் நாரை அறியாத குளமும் உண்டோ?

நயத்திலாகிறது பயத்திலாகாது
நரிக்கு இடங்கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்
நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்
நரை திரை இல்லை. நமனும் அங்கில்லை சசடு
நல் இணக்க மல்லது அல்லது படுத்தும்
நல்லது செய்து நடு வழியே போனால் பொல்லாதது போகிற வழியே போகிறது
நல்ல வேளையில் காழிப்பால் கறவாதது கன்று செத்துக் கலப் பால் கறக்குமா?
நல்ல பெண்ணுக்கு ஒரு சொல் நல்ல மாட்டுக்கு ஓர் அடி
நல்லவன் என்று பெயர் எடுக்க நெடுநாட் செல்லும் எ00
நல்லவன் ஒரு நாள் நடுவே நின்றால் அறாத வழக்கும் அறும்
நல்லார் பொல்லாரை நடக்கையால் அறியலாம்

## நா

நா அசைய நாடு அசையும்
நாக்கிலே இருக்கிறது நன்மையும் தீமையும்
நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் வேண்டுமா?
நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்
நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்
நாய் இருக்கிற இடத்தில் சண்டை உண்டு
நாய்க்கு வேலையும் இல்லை நிற்க நேரமும் இல்லை
நாய் விற்ற காசு குரைக்குமா? எக0
நாலாறு கூடினால் பாலாறு
நாலு பேர் கூடினது சபை
நாளைக்குத் தின்கிற பலாப்பழத்திலும் இன்றைக்குத் தின்கிற களாப்பழம் நல்லது
நாள் செய்வது நல்லார் செய்யார்
நாற்பது வயதுக்குமேல் நாய்க்குணம் எகரு

## நி

நித்தம் போனால் முத்தமும் சலிக்கும்
நித்திய கண்டம் பூரணாயுசு
நித்தியங் கிடைக்குமா அமாவாசைச் சோறு?
நித்திரை சுகம் அறியாது எஉ0
நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடிய வேண்டும்
நிழலின் அருமை வெயிலிற் போனால் தெரியும்
நின்ற வரையில் நெடுஞ்சுவர் விழுந்த அன்று குட்டிச்சுவர்

## நீ

நீந்த மாட்டாதவனை ஆறு கொண்டு போகிறது
நீர் ஆழம் கண்டாலும் நெஞ்சு ஆழம் காணப்படாது எஉரு

நீர் உள்ள மட்டும் மீன்குஞ்சு துள்ளும் எஉ௫
நீர்மேல் எழுத்து நிற்குமா?
நீலிக்குக் கண்ணீர் இமையிலே
நீளநீளத் தெரியும் மெய்யும் பொய்யும்

### நு

நுனிக்கொம்பில் ஏறி அடிக்கொம்பு வெட்டுவார்களா?

### நூ

நூலளவே யாகுமாம் நுண்ணறிவு எ௩0
நூல் கற்றவனே மேலவன் ஆவான்
நூற்றுக் கிருந்தாலும் காற்றுக்கு இரை
நூற்றுக்கு மேல் ஊற்று, ஆயிரத்துக்குமேல் ஆற்றுப்பெருக்கு
நூற்றைக் கொடுத்தது குறுணி

### நெ

நெய் முந்தியோ திரிமுந்தியோ? எ௩௫
நெருப்பு இல்லாமல் நீள் புகை எழும்புமா?
நெருப்பு என்றால் வாய்வெந்து போமா?
நெருப்புப் பந்தலிலே மெழுகுப் பதுமை ஆடுமா?
நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்கும் பாயும்

### நே

நேற்று உள்ளார் இன்று மாண்டனர் எ௪0

### நை

நைடதம் புலவர்க்கு ஔடதம்

### நொ

நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு
நொறுங்கத் தின்றால் நூறு வயது

### நோ

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
நோய் கொண்டார் பேய் கொண்டார்
நோய்க் கிடங்கொடேல் எ௪௫

### ப

பகலில் பக்கம் பார்த்துப்பேசு இரவில் அதுதானும் பேசாதே
பகுத்தறியாமல் துணியாதே, படபடப்பாகச் செய்யாதே
பகைவ ருறவு புகையெழு நெருப்பு
பக்கச் சொல் பதினாயிரம் எ௫0

பசியுள்ளவன் ருசி யறியான்
பசி வந்திடில் பத்தும் பறந்துபோம்
பசுவிலும் ஏழை இல்லை, பார்ப்பாரிலும் ஏழையில்லை
பச்சைமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டுமா ?
பஞ்சும் நெருப்பும் ஒன்றாய்க் கிடக்குமா ? ௭௫௫
படிக்கிறது திருவாய்மொழி, இடிக்கிறது பெருமாள் கோயில்
படைக்கும் ஒருவன் கொடைக்கும் ஒருவன்
படையிருந்தால் அரணில்லை
படை முகத்திலும் அறிமுகம் வேண்டும்
பட்ட காலிலே படும், கெட்டகுடியே கெடும் ௭௬௦
பட்டா உன் பேரில் சாகுபடி என்பேரில்
பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்குக்கு விலை சொல்லுகின்றாய்
பட்டும் பட்டாடையும் பெட்டியிலிருக்கும், கால்காசு கந்தை ஓடி உலாவும்
பணக்காரன் பின்னும் பத்துப்பேர், பைத்தியக்காரன் பின்னும் பத்துப்பேர்
பணத்தைப் பார்க்கிறதா பழைமையைப் பார்க்கிறதா? ௭௬௫
பணம் உண்டானால் மணம் உண்டு
பணம் என்ன செய்யும் பத்தும் செய்யும்
பணம் பந்தியிலே குலம் குப்பையிலே
பண்ணப் பண்ணப் பலவிதம் ஆகும்
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் ௭௭௦
பதறாத காரியம் சிதறாது
பந்திக்கில்லாத வாழைக்காய் பந்தலிலே கட்டித்தொங்குகிறதாம்
பத்துப்பேருக்குப் பல்குச்சி ஒருவனுக்குத் தலைச்சுமை
பரணியிலே பிறந்தால் தரணி ஆளலாம்
பருத்திக்கு உழும் முன்னே தம்பிக்கு எட்டு முழம் ௭௭௫
பலநாளைத் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான்
பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டமாட்டான்
பல்லக்கு ஏற யோகம் உண்டு, உன்னி ஏறச் சீவன் இல்லை
பல்லுப் போனால் சொல்லுப் போச்சு
பழகப் பழகப் பாலும் புளிக்கும்
பழம் புண்ணாளி பாதி பரிகாரி ௭௮௦
பழி ஒரு பக்கம் பாவம் ஒரு பக்கம்
பழுத்த ஓலையைப் பார்த்துக் குருத்தோலை சிரிக்கிறதாம்
பழுத்த பழம் கொம்பிலே நிற்குமா ?
பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது ௭௮௫
பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா ?
பனி பெய்தால் மழை இல்லை, பழம் இருந்தால் பூ இல்லை

பனை நிழலும் நிழலோ, பகைவர் உறவும் உறவோ?

பனை மரத்தின்கீழே பாலைக் குடித்தாலும் கள் என்று நினைப்பர்

பன்றிக்குப் பின் போகிற கன்றும் பீ தின்னும் ௭௯0

பன்றி பல குட்டி சிங்கம் ஒரு குட்டி

### பா

பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்

பாடில்லாமற் பயனில்லை

பாம்பு என்றால் படையும் நடுங்கும்

பாம்புக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் விடத்தையே கொடுக்கும்

பாம்பை முட்டையிலே புலியைக் குட்டியிலே கொல்லவேண்டும்

பாராத உடைமை பாழ்

பார்த்தால் பூனை பாய்ந்தால் புலி

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்

பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளு ௮00

பானையில் உண்டானால் அகப்பையில் வரும்

### பி

உடனுக்குடனே - அப்போதைக்கப்போது
உடனொத்தவன் - சமமானவன்
உடும்பு நாக்கன் - வஞ்சகன்
உடுமாற்று - உடைமாற்றுகை, நடைபாவாடை
உடைப்பிற் போடுதல் - அகலத் தள்ளுதல்
உடைப்பெடுத்தல் - வெள்ளத்தாற் கரையழிதல்
உட்கிடக்கை - உட்கருத்து
உட்புகுதல் - உள்ளே செல்லுதல், ஆழ்ந்து கவனித்தல்
உண்டாயிருத்தல் - சூல்கொண்டிருத்தல்
உண்டியற்புரட்டு - பண்மோசம்
உதப்பிவாயன் - எச்சில் தெறிக்கப் பேசுவோன்
உதவாக்கட்டை - பயனற்றவன்
உதறுகாலி - காலை இழுத்து நடப்பவள்
உப்பில்லாப் பேச்சு - பயனற்ற உரையாடல்
உம் கொட்டுதல் - சம்மதித்தல், ஒப்புக்கொள்ளல்
உயிர்விடுதல் - மிகப்பாடுபடுதல், இரத்தல்
உரித்து வைத்தல் - வெளிப்படுத்தி வைத்தல், நேரொப்பாதல்
உருக்குலைதல் - முன்னுருவம் அழிதல், மேனி மெலிதல்
உருட்டிப் போடுதல் - பேச்சால் மருட்டி வெல்லுதல், அழித்து விடுதல்
ஏக்கச் சக்கம், எசகு பிசகு - தாறுமாறு
எடாதவெடுப்பு - தகாத செயல், அரிய செயல்
எடுத்த எடுப்பில் - உடனே
எடுத்தபடி - உடனே, முன்னாயத்தமின்றி
எடுத்துச் சொல்லுதல் - சிறப்பித்துச் சொல்லுதல், அறிவு கூறுதல்
எடுத்துப் போடுதல் - நீக்குதல், திடுக்கிடச் செய்தல்
எடுத்தெறிதல் அலட்சியம் பண்ணுதல், மதிப்பின்றி நடத்தல்
எடுப்பெடுத்தல் - அரியதை முயலுதல்
எடுப்பார் கைப்பிள்ளை-யாவருக்கும் வசப்படக் கூடியவன், சூதறியாதவன்

எட்டுக் கண் விட்டெறிதல் - எங்குந் தன் அதிகாரஞ் செல்லுதல்
எட்டிற் பத்தில் - இடையிடையே
எய்ப்பில் வைப்பு - இளைத்த காலத்தில் உதவுவதற்காக எடுத்து வைக்கும் பொருள்
எழுதவெண்ணிப் படித்தல் - ஒன்றும் விடாது படித்தல்
எள்ளளவும் - சிறிதளவும்
ஏக்கன் போக்கன், ஏக்கி போக்கி - ஒன்றுக்கு முதவாதவன்
ஏச்சுக் காட்டுதல் - பழிப்பைச் சுட்டிக்காட்டிப் பேசுதல்
ஏடாகூடம் - தாறுமாறு
ஏட்டிக்குப்போட்டி - விதண்டாவாதம்
ஏட்டுச் சுரைக்காய் - அனுபவத்தோடு கூடாத கல்வியறிவு
ஏட்டுப்படிப்பு - உலகப் பழக்கமில்லாத கல்வியறிவு
ஏணல்கோணல் - ஒழுங்கின்மை
ஏணுக்குக் கோண் - எதிரிடையான பேச்சு
ஏதுங்கெட்டவன் - பயனற்றவன்
ஏப்பை சாப்பை - பயனற்றது
ஏய்ப்புக்காட்டுதல் - நயவஞ்சகஞ் செய்தல்
ஏழைக்குறும்பு - பேதை போலக் காட்டிச் செய்யுங் குறும்பு
ஏறக்கட்டுதல் - உயரக்கட்டுதல், அடியோடு நிறுத்தல்
ஏற இறங்கப் பார்த்தல் - மேலுங் கீழும் பார்த்தல்
ஏற வாங்குதல் - விலகி யிருத்தல், முழுதும் விலக்குப் பெறுதல்
ஏற்றக் குறைச்சல், ஏற்றத் தாழ்ச்சி - உயர்வு தாவ்வு
ஏற்றத் தாழ்வு - பெருமை சிறுமை
ஏனென்னுதல் - ஆபத்துக்குதவ விரைவுதல்
ஐதுநொய்தாக மிக்க இலேசாக
ஒட்டப் போடுதல் - தன்னைத் தானே பட்டினி போடுதல்
ஒட்டிக் கிரட்டி - ஒன்றுக்கு இரண்டு பங்கு
ஒட்டிக் கொடுத்தல் - உறுதி பண்ணித் தருதல்
ஒட்டு மொத்தம் - முழு மொத்தம்
ஒட்டுவா ரொட்டி - ஒட்டுநோய், தொற்று நோய்
ஒதுக்குப் பொதுக்குப் பண்ணுதல் - பொருளை மோசஞ்செய்தல் சொத்தை மறைத்து வைத்தல்
ஒத்துப் பாடுதல் - ஆமோதித்தல், ஏற்றுக் கொள்ளுதல்
ஒத்துழைத்தல் பலரோடு உளமொத்து உழைத்தல்
ஒத்துக்கொடுத்தல் - பொறுப்பேற்றல் கணக்குகட்கு வகை சொல்லுதல்
ஒருகாலில் நிற்றல் - விடாப்பிடியாய் நிற்றல்
ஒருகைபார்த்தல் - வெல்ல முயலுதல்
ஒருகையா யிருத்தல் - எதிர்க்கட்சிக்குப் பகைமையாய் ஒற்றுமையோடிருத்தல்
ஒருசொல் வாசகன் - சொற்பிறழாதவன்
ஒருதலை - ஒரு சார்பு
ஒருநாளைக் கொருநாள் - நாள் செல்லச் செல்ல

ஒரு போக்காய்ப் போதல் - திரும்பி வாராது போதல்
ஒருமடை செய்தல் - ஒரு முக மாக்குதல்
ஒருமுகமாய்ப் பேசுதல் - எல்லா ரும் ஒரேபடியாய்ப் பேசுதல்
ஒருவழிப்படுதல் - ஒற்றுமைப் படுதல்
ஒளிமறைவு - இரகசியம், அரு மறை
ஒன்றரைக் கண்ணன் - ஒருபக் கஞ் சரிந்த பார்வையாளன்
ஒன்றுக்குமற்றவன் - பயனற்ற வன்
ஒன்று கூடுதல் - ஒன்ருய்ச் சேர்த்தல், ஒற்றுமைப் படு தல்
ஒன்றுக் கொத்தையாதல் - அரை குறையாதல்
ஒன்று மற்றவன் - வறிஞன்
ஒன்றுபாதி - ஏறக்குறையப் பாதி
ஓடவைத்தல் - உறுதிப் படுத் தல், புடமிடுதல்
ஓடியாடிப் பார்த்தல் - பெரு முயற்சி எடுத்தல்
ஓட்டைசாட்டை - பயனற்றது
ஓட்டையுடைசல் - சிதைந்த பண்டங்கள்
ஓட்டைவாயன் - மறையினை வெளியிடுபவன்
ஓட்டங் காட்டுதல் - ஓடுவது போல் நடித்தல்
ஓட்டம் பிடித்தல் - தப்பி ஓடுதல்
ஓட்டாண்டி - இரந்து உண் போன்
ஓட்டைக் கை - பெருஞ் செல வாளி
ஓய்ச்ச லொழிச்ச லில்லாமை - சிறிதும் ஒழிவில்லாமை
ஓய்வொழிச்சல் - இளைப்பாறுகை
ஓரடிக்கோரடி - அடிக்கடி
கக்கட்ட மிடுதல் - சிரிப்பின் உரத்த சத்தமிடுதல்
கக்கல் கரிசல் - கலங்கல் நீர்
கக்கலும் விக்கலுமாய் - கதிர் ஈன்றதும் ஈனுததுமாய்
கக்கவைத்தல் - நெருக்கி வாங்கு தல்
கங்குகரையில்லாமை - அள வின்மை
கங்கணங்கட்டுதல் - ஒரு செயலை முடிக்க முனைந்து நிற்றல்
கசகசத்தல் - வியர்த்தல்
கசகரணம் போடுதல் - பெரு முயற்சி செய்தல்
கசாகூளம் - குப்பை
கச்சங்கட்டுதல், கச்சை கட்டு தல் - ஒரு செயலை முடிக்க வரிந்து கட்டி நிற்றல்
கச்சந்தி யவிழ்த்தல் - பொய் மூட்டை யவிழ்த்தல்
கடன்கட்டாய்ப் பேசுதல் - கடு மையாகப் பேசுதல்
கடன்கழித்தல் - மனமின்றிச் செய்தல்
கடுக்காய் கொடுத்தல் - ஏமாற்றி விடுதல்
கடைகட்டுதல் - காரியத்தை நிறுத்திவிடுதல், கடையை மூடுதல்
கடைகெடுதல் - மிக இழிவடைதல்
கடைத்தேறுதல் - ஈடேறுதல்
கடைவிரித்தல் - பலர்முன் தன் ஞற்றலைச் சொல்லுதல்
கடுமுடுக்கு - விரைவு நடை
கட்சிகட்டுதல் - ஒன்றன் பொருட்டு முரணி நிற்றல்
கட்டளைக்கல் - உரைகல்
கட்டிச் சுருட்டுதல் - பொருளைச் சுருட்டிக் கட்டுதல், கடை யைக் கட்டுதல்

கிட்டா கட்டி - விடாத்தன்மை, விடாப்பிடி
கட்டிவருதல் - ஊதியங் கூடி வருதல்
கட்டிவிடுதல் - பொய்ச்செய்தி உண்டாக்குதல்
கட்டுக் கதை - பொய்க்கதை
கட்டுக்கிடை - நாட்பட்ட சரக்கு
கட்டுக் கோப்பு - புனைந்துரை, மேற்கூரை
கட்டுங் காவலுமாதல் - பெருங் காவலுடையதாதல்
கட்டுடைதல், கட்டுவிடுதல் - உடல்தளர்தல்
கட்டுப்படி - பொருட்கேடில்லாமல் ஒரு சிறிது ஊதியத்துடன் அமைகை
கட்டுமுட்டு - அமைதி, உடற் கட்டு
கட்டுரைத்தல் - உறுதியாகச் சொல்லுதல்
கட்டையவிழ்த்தல் - பொய் கூறத் தொடங்குதல்
கணக்கு வழக்கு - முறைமை அலுவல், கொடுக்கல் வாங்கல்
கண்காட்டி விடுதல் - சாடையாய் ஏவிவிடுதல்
கண்கொள்ளாக் காட்சி - வியத்தற்குரிய தோற்றம்
கண்டதும் கடியதும் - நல்லதும் தீயதும்
கண்ட துண்டம் - பல துண்டம்
கண்டமட்டும் - மிகுதியாய்
கண்டானு முண்டானும் - வீட்டுத் தட்டுமுட்டுக்கள்
கண்டுங் காணுமை - போதியதும் போதாததுமாகை
கண்டுமுதல் - அடித்து முதலான தானியம்



கண்ணுயிருத்தல் - விழிப்பாலிருத்தல், அருமையாயிருத்தல்
கண்ணுக்குக் கண்ணுதல் - மிகப் பாராட்டப்படுதல் அந்தரங்கமாயிருத்தல்
கண்ணுங் கருத்துமாய் - முழுக் கவனிப்புடன்
கண்ணெடுத்துப் பார்த்தல் - அருள் செய்தல்
கண்ணைக் காட்டுதல் - கண் சாடை காட்டுதல்
கண்ணோடுதல் - இரங்குதல், மேற்பார்வை பார்த்தல்
கண்பிதுங்குதல் - வேலைமிகுதியால் வருத்தமிகுதல்
கண்மூடித்தனம் - கவனமின்மை
கண்வளர்தல் - தூங்குதல்
கண்விழிப்பு - சாக்கிரதை
கதைகட்டுதல் - பொய்ச்செய்தி கிளப்புதல்
கதைபண்ணுதல் - கட்டிப்பேசுதல்
கதைவளர்த்தல் - பேச்சை விரித்தல்
கத்திமுனையாதல் - மிகக் கண்டிப்பாயிருத்தல்
கந்தல்கூளம் - தாறுமாறு
கம்பளிப் பேச்சு - வீண் பேச்சு
கம்பி நீட்டுதல் - ஓடிவிடுதல்
கயிறு கட்டிவிடுதல், கயிறு திரித்தல் - பொய்ச் செய்தி உண்டாக்கி விடுதல்
கரிபூசுதல் - மானங்குலைத்தல்
கரடு முரடு - ஒழுங்கின்மை
கரை ஏறுதல் - உய்வடைதல், ஈடேறுதல், வளர்க்கப்படுதல்
கரைகடத்தல் - எல்லைமீறுதல்
கருக்கழிதல் - புதுமைகுலைதல், கூர் மழுங்குதல்
கருவறுத்தல் - நிர்மூலமாக்குதல்

கரை கண்டவன் - நன்கு பழகி அறிந்தவன்
கரைத்துக்குடித்தல் - முற்றக் கற்றறிதல்
கரைதலைப்பாடம், கடைதலைப் பாடம் - தலைகீழாகப் பாடம் பண்ணுகை
கரைப்படுதல் - கரைசேர்தல், உய்வடைதல், சேரவேண்டிய இடஞ்சேர்தல்
கரைபுரளுதல் - மிகுதல்
கலகலப்பு - ஒலிககை, கலந்து பழகுகை, உற்சாகமுடைமை
கல்லில் நாருரித்தல் - இல்லாத பொருளைப் பெற முயலுதல்
கவைக்குதவாத - பயனற்ற
கழித்துக் கட்டுதல் - இகழ்ந்து ஒதுக்குதல், போகச் சொல்லி நெகிழவிடுதல்
கழுத்தறுத்தல் - பெருந்துன்பத்துக்கு உள்ளாக்குதல்
கழுத்திற் கட்டுதல் - வற்புறுத்திப் பொறுப்பாளியாக்குதல்
கழுத்துக் கொடுத்தல் - தன் வருத்தம் பாராமல் பிறர் காரியத்தைத் தானேற்று நிற்றல், வாழ்க்கைப்படுதல்
களைவாங்குதல் - அழகுகுறைதல்
கள்ளேடு விடுதல் - அரைகுறையாக வேலைசெய்தல்
கறந்த மேனியாய் - வேறு கலப்பின்றிச் சுத்தமாக
கற்போடுதல் - காரியத்தைக் கெடுத்தல்
கன்னங்கரிய - மிகக்கருமையான
காக்கான் போக்கான் - ஊர் பெயர் தெரியாதவன்
காட்டிக் கொடுத்தல் - கற்றுக் கொடுத்தல், தன் பக்கத்தானை எதிரியின் வயமாக்குதல்
காதறை கூதறை - ஒழுக்கங் கெட்டவள்
காதுகுத்துதல் - வஞ்சித்தல்
காரியப் பைத்தியம் - பயன் கருதிப் பித்தன்போல் நடப்பது
காலங்கண்டவர் - வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்தவர்
காலமல்லாக் காலம் - அகாலம்
காலில் விழுதல் - மன்னிப்புக் கேட்டல்
காலோடி கையோடி - தொழிலற்றுத் திரிபவன்
காறுபாறு - கவனிப்பு
காற்ருய்ப்பறத்தல் - விரைவு, சுறுசுறுப்பு
கிடுகிடாய்த்தல் - நடுநடுங்குதல்
கிடுகிடுத்தல் - பல்லோடு பல் கொட்டுதல்
கிடைச் சரக்கு - நாட்பட்ட சரக்கு
கிட்டமுட்ட - ஏறக்குறைய
கிளப்பி விடுதல் - தூண்டி விடுதல், நீக்குதல்
கிள்ளிக்காட்டுதல் - குறிப்புக் காட்டுதல்
கிள்ளுக்கீரை - மிகவும் எளியது
கிள்ளுங் கிழியுமாய் - பயனற்றதாய்
கிறுகிறுத்தல் - மயக்கமாதல், தடுமாறுதல்
கீல் கீலாய் - சந்து சந்தாய்
கீழ் நோக்குதல் - தாழ்ந்த நிலைக்குப் போதல்
குடிமுழுகிப் போதல் - முற்றும் அழிதல்
குடுகுடுப்பு - பரபரப்பு
குட்டிச்சுவர் - பழுது, பாழ்மனை
குண்டக்கமண்டக்கம் - சுருண்டு கிடக்கும் நிலை

குண்டுங் குழியுமாய் - மேடும் பள்ளமுமாய்
குதுகுதுப்பு - குளிரால் நடுங்குகை
குத்துக்கு நிற்றல் - வாதாடுதல்
குந்துமதிப்பாய் - சுமாராய்
குமிழ் குமிழ்தல் - பிறர்க்குத் தோன்றாமல் மறைத்தல்
குமுகுமுத்தல் - மணம் வீசுதல்
கும்பிடுகள்ளன் - வணக்கங்காட்டும் வஞ்சகன்
குரங்குப்பிடி - பிடிவாதம்
குருட்டுப் பாடம் - பொருள் தெரியாமல் நெட்டுருச் செய்கை
குழைச்சான் கொட்டுக் கொட்டுதல் - அடிமைபோல் வணக்க வொடுக்கமாய் நடத்தல்
குழையடித்தல் - ஆளை வசப்படுத்தல்
குள்ளம் பாய்தல் - தந்திரமாயிருத்தல்
குறிகெட்டவன் - நெறியற்றவன்
குறிப்பாய்ப் பார்த்தல் - கவனமாக உற்றுப்பார்த்தல்
குறுக்கிடுதல் - பிறர் காரியத்தில் தலையிடுதல்
குறுக்கு நெடுக்கும், குறுக்கு மறுக்கும் - இங்கு மங்கும்
குறுக்கே மடக்குதல் - இடையிற் பேசி வாயடக்குதல்
குறுவிழி விழித்தல் - சினம் பயம் முதலியவற்றால் வெறுத்துப் பார்த்தல்
குறை குடம் - கல்வி கேள்விகளால் நிரம்பாதவன்
கூடுவிடுதல் - இளைத்தல், இரத்தல்
கூட்டநாட்டம் - பொது மக்கள் கூடும் நிலைமை
கூட்டாஞ் சோறு - பல காய் கறிகள் சேர்த்துப் பொங்கிய சோறு
கூட்டிவைத்தல் - வண்டுவன புரிந்து நலஞ் செய்தல்
கூட்டுமுட்டு - பலருங் கூடுகை, பழிப்புரை
கூட்டோடு - அடியோடு
கூர்வாங்குதல் - கருவியைக் கூர்மையாக்குதல்
கூழைக்கும்பிடு - போலி (வஞ்சக) வணக்கம்
கூழைக்குழும்பு - பிறர் அறியாமற் செய்யுந் தீமையான செய்கை
கூழைப் பார்வை - வஞ்சகப் பார்வை
கூறிட்டு மொழிதல் - வினாக்களுக்கேற்பப் பகுத்துக் கூறும் விடை
கூறை கோட்படுதல் - ஆடையைப் பறிகொடுத்தல்
கேசாதிபாதம் - முடிமுதல் அடிவரை
கேளல் கேளிர் - பகையும் நட்புமில்லாத அயலார்
கைகழுவுதல் - பொறுப்பை நீக்கிக்கொள்ளுதல்
கை காணுதல் - அனுபவித்தல்
கைகூடுதல் - சித்தியடைதல்
கைகொடுத்தல் - உதவி செய்தல்
கைக்குதவல் - சமயத்துக்குதவல்
கைச்சரக்கு - கற்பனையாகக் கூறும் சொல்
கைதட்டிப் போடுதல் - நீக்கிவிடுதல்
கை தலைவைத்தல் - பெருந் துன்பமடைதல்
கைதவறுதல் - தொலைந்து போதல், இறத்தல்

கை நனைத்தல் - பிறர் வீட்டில் விருந்துண்ணல்

கை நீட்டுதல் - திருடுதல்

கை நோட்டம் - கையால் அளவிடும் மதிப்பு

கை பார்த்தல்-உதவி நாடுதல், பழுது பார்த்தல், நாடி பார்த்தல், இரேகை பார்த்தல்

கை பார்த்து உண்ணுதல்-பிறர் கை பார்த்து உண்டு வாழ்தல்

கை பிடித்தல் - மணம் புரிதல்

கை போதல் - முற்றும் வல்லவனாதல்

கைப்பாடுபடுதல் - அரும்பாடு படுதல்

கைப்பிடியாய்ப் பிடித்தல் - களவுங் கையுமாய்ப் பிடித்தல்

கைமாட்டாதார் - வேலைசெய்ய இயலாதவர்

கைமாருட்டம் - கைத்தவறு

கைமாற்று - கைக்கடன்

கைமுடக்கம் பணமுட்டுப்பாடு

கைமேல் - உடன் கையில்

கைம்மிகுதல் - அளவு கடத்தல்

கையடக்கம் - மீத்து வைக்கும் பொருள்

கையடித்தல் - உறுதி தருதல்

கையடிப்படுதல் - ஒரு பொருள் பலர் கை கடத்தல்

கையமர்த்துதல் - அடக்கியாளுதல்

கையறுதல் - செயலற்றுப் போதல், அளவு கடத்தல், இறத்தல்

கையாள் - குற்றேவல் செய்வோன்

கையாலாகாதவன் - வேலை செய்யத் திறமையற்றவன்

கை யிளைத்தல் - செல்வ நிலை குன்றுதல்

கையுங்களவும் - கையும் மெய்யுமாய்

கையைக் கடித்தல் - பொருள் நட்டமாதல்

கை யொழியாமை - முயற்சி நீங்காமை

கையோடு கையாய் - காரியத்தோடு காரியமாய்

கையோட்டம் - செல்வநிலை

கையோலை செய்தல் - தீர்மானித்தல்

கொஞ்ச நஞ்சம் - சிறிதளவு

கொடிகட்டி நிற்றல் - உறுதிப்பாட்டுடன் முயற்சியை மேற்கொள்ளுதல்

கொடிகட்டி வாழ்தல் - மிகுந்த செல்வவாழ்க்கையி லிருத்தல்

கொடிமுடிந்த வழக்கு - தீராத சிக்கலான வழக்கு

கொடி விடுதல் - மிகுதியாதல்

கொடுகொடுத்தல் - நடுங்குதல், அவசரப்படுத்தல்

கொடுக்கல் வாங்கல்-கொடுத்து வாங்கிச் செய்யும் வணிகம் முதலியவை

கொடுக்குக் கட்டி நிற்றல் - விடாப்பிடியா யிருத்தல், ஊக்கமாயிருத்தல்

கொடுக்குப் பிடித்தல்-ஒருவனை விடாது பின் தொடர்ந்து திரிதல்

கொடுத்து வைத்தல்-பொருளை நம்பி வைத்தல், நல்வினை பெற்றிருத்தல்

கொடுநாக் கெறிதல் - ஒன்றை விரும்பி நாவால் வாய்ப்புறத்தைத் துழாவுதல்

கொட்டமடித்தல் - மனம்போன படி குறும்பு செய்தல்

கொட்டிக் கொடுத்தல் - மிகுதியாய்க் கொடுத்தல்

கொட்டை போடுதல் - விதை விதைத்தல், தொழில் முதலியவற்றில் பழக்கப்படுதல்
கொண்டான் கொடுத்தான்-சம்பந்தஞ் செய்தோர்
கொண்டு செலுத்தல் - இறுதி வரை நடத்துதல், கொடுக்கல் வாங்கல் செய்தல்
கொத்துங் குறையுமாய் - அரை குறையாய்
கொம்மை கொட்டுதல் - தட்டியழைத்தல், முதுகைத் தட்டிக் கொடுத்தல்
கொழு கொம்பு - பற்றுக்கோடு
கொள்முதல் - வாங்கினவிலை
கொள்வனை கொடுப்பனை - பெண்ணைக் கொடுத்துப் பெண்ணை வாங்கும் திருமணத் தொடர்பு
கொள்ளா கொள்ளை - மிகுதி
கொள்ளாக்கொள்ளி-தணியாத உண்டிவிருப்ப முள்ளவள்
கொள்ளி சொருகுதல் (வைத்தல்)-கேடுசெய்தல், தீவைத்தல்
கோகு தட்டுதல் - ஆரவாரஞ் செய்தல்
கோடானு கோடி - பலகோடி
கோட்டி கொள்ளுதல் - அவையிற் பேசுதல்
கோணல்மாணல் - தாறுமாறு
கோபுரந்தாங்கி - காரியப் பொறுப்பாளியாக நடிப்போன்
கோமாளிக் கூத்து - நகைப்பு விளைக்குஞ் செயல்
கோயிற் பெருச்சாளி - கோயிற் சொத்தை மறைவாகக் கொள்பவன்
கோலக்காரன் - கேலிக்காரன்
கோலங் காணுதல் - துன்பத்திற்கு உள்ளாக்குதல்
கோலாகலம் - கூக்குரல், ஆடம்பரம்
கோலாகலம் பண்ணுதல்-ஒழுங்கீனமாய் நடத்தல்
கௌளிக் கட்டாய்ச் சொல்லுதல் - குறி சொல்லி ஏமாற்றுதல்
சகட்டடியாக - மொத்தமாக
சக்கரஞ் சுற்றுதல் - பெரிதும் துன்புறுத்தல்
சக்கைவாங்கு வாங்குதல்-மிகக் கடிந்து பேசுதல்
சடைவாறுதல் - இளைப்பாறுதல்
சடை விழுதல் - பயன்படாது போதல்
சட்ட திட்டம் - சட்ட ஒழுங்கு
சட்டந்தட்டுதல் - புனுகு வழித்தல்
சட்டி எடுத்தல் - இரத்தல்
சட்டைபண்ணுதல் - பொருள் படுத்துதல்
சண்டை பிடித்தல் - கடிந்து கூறுதல்
சதசதப்பு - ஈரப்பற்று
சந்தியில் இழுத்தல் - பழிப்பிற்கிடமாக்குதல்
சந்தியில் நிற்றல் - ஆதரவின்றி இருத்தல்
சந்து சொல்லுதல் - தூதராகிச் செய்தியறிவித்தல்
சந்து பொந்து - மூலை முடுக்கு, பொந்து புடைகள்
சப்பாணி கொட்டுதல்-கைசேர்த்துக் கொட்டுதல்
சப்பைக் கட்டுக் கட்டுதல் - குற்றங் குறைகளைத் தாங்கிப் பேசுதல்
சரக்கவிழ்த்தல் - பொய்யான செய்திகளைக் கூறுதல்

சரடு திரித்துக் கூறுதல் - ஒன்றைப் பொய்யாகக் கற்பித்துக் கூறுதல், தந்திரமாகத் தீயன செய்யத் தூண்டுதல்

சரடு விடுதல் - பிறர் வழியாகத் தன் கருத்தை வெளியிடுதல்

சரமாரியாய் - இடைவிடாமல்

சரிக்கட்டுதல் - ஈடுசெய்தல், கடனைத் தீர்த்தல், இணக்கமாய்ச் செய்தல்

சரிக்குச்சரி - பதிலுக்குப் பதில், பழிக்குப்பழி

சரிவர - முழுதும்

சர்க்கரைப் பேச்சு - இனிமை காட்டுஞ் சொல்

சல்லோ பில்லோ வென்றிருத்தல் - சங்கோசமின்றிப் பழகுதல்

சள்ளுப்படுதல் - தொந்தரவுக்குள்ளாதல்

சாங்கோபாங்கமாய் - முழுதும்

சாயல் மாயலாய் - சாடைமாடையாய்

சாலமாலம் - வஞ்சகம்

சிக்கல் பிக்கல் - தாறுமாறு, முட்டுப்பாடு

சிங்கியடித்தல் - வறுமையால் வாடுதல்

சிட்டாய்ப் பறத்தல் - சிட்டுக்குருவிபோல விரைந்தோடிப் போதல்

சித்திரைச் சூரியன் - குறும்பன்

சிம்பல் சிலும்பல் - கந்தை

சிரித்த பிழைப்பு - ஏளனஞ் செய்யத்தக்க வாழ்க்கை

சிரிப்பாணிப்படுதல் - சிறுமைப்படுதல்

சிரிப்பாய்ச் சிரித்தல் - இகழ்தல், மலிந்து கிடத்தல், நிலைகெட்டுத் திரிதல்

சிலிர் சிலிர்த்தல் - உடல் புளகித்தல்

சில்லந் தட்டிப் போதல் - வறுமைக்கு உட்படுதல்

சிறகு கட்டிப்பறத்தல் - விரைந்து செல்லுதல்

சிறப்புச் செய்தல் - விழாக் கொண்டாடுதல், உபசரித்தல்

சிறிதுரைத்தல் - இகழ்ந்து பேசுதல்

சின்னபின்னம், சின்னு பின்னம் - கண்ட துண்டம்

சீட்டுக் கொடுத்தல் - வேலையினின்றும் விலக்கல்

சீட்டு நாட்டு - கூட்டுச் சீட்டு முதலியன

சீறுமாறு - தாறுமாறு

சுக்காஞ் செட்டி - கடுஞ்செட்டுள்ளவன்

சுக்குச் சுக்காய் - துண்டு துண்டாய்

சுட்டி சுட்டியாக - வட்டவட்டமாக

சுரித்த முஞ்சி - வெறுப்பைக் காட்டும் முகம்

சுருக்கிப் பிடித்தல் - செலவு முதலியன குறைத்தல்

சுருக்குக் கொடுத்தல் - கண்டிப்புக் காட்டுதல்

சுருக்குப் போட்டுக்கொள்ளுதல் - தற்கொலை புரிந்துகொள்ளுதல்

சுருள வாட்டுதல் - வருந்த வேலை வாங்குதல்

சுவடியைக் கட்டுதல் - பேச்சை நிறுத்தல், படிப்பை நிறுத்தல்

சுழலமாடுதல் - ஒன்றைப் பெறுதற்கு இடைவிடாது முயலுதல், வஞ்சகமாகக் கொள்ளுதல்

சுழற்றியடித்தல் - சுழன்று வீசுதல், கொள்ளைநோய் வருதல்
சுழித்து வாங்குதல் - சுழற்றி உள்ளிழுத்தல்
சுழியிலெழுத்து-தலைவிதி
சுற்றிப் பிடித்தல் - வயிறு மிகவும் நோதல், பற்றிக்கொள்ளுதல்
சுற்றுக்கா விடுதல் - விடாது பற்றித் தொடர்தல்
சுற்றுஞ் சுழற்றுமாய் நேரின்றி வளைந்து
சுற்றுமுற்றும் - நான்கு பக்கமும்
சுற்று-வட்டகை (வட்டாரம்) - சுற்றுப்புறத்துக் கிராமங்கள்
சூடங் கெட்டுப் போதல் - நிலைகெட்டு முடிவடைதல்
சூடுகாட்டுதல் - கடுமைக் குறிகாட்டுதல்
சூழ்போதல் - ஆராய்தல்
சூளுறுதல் - ஆணையிடுதல்
சூறையாடுதல் - கொள்ளையடித்தல்
செக்கடி முண்டன் - வெறுந்தடியன்
செட்டுப் பொட்டாதல் - வணிகஞ் சிதைத்தல்
செய்நேர்த்தி - சரியான போஷணை, சிறந்த சாகுபடி
செலவு கொடுத்தல் - உத்தரவு கொடுத்தல், நட்டமிறுத்தல்
சேகண்டியடித்தல் - வீண் பேச்சுப் பேசிக் காலங்கழித்தல், பலரறியக் கூடுதல்
சேர் கொடுத்தல் - காட்டிக் கொடுத்தல்
சேறுஞ் சுரியுமாய் - குழைவாய்
சையத்திருத்தல் - தன்னிலையிலிருத்தல்
சையொத்திருத்தல் - இணக்கமாயிருத்தல்
சொடக்கெடுத்தல் - நெட்டி வாங்குதல்
சொட்டைச் சொல் - பழி வார்த்தை
சொட்டுப் போடுதல் - குறை கூறுதல், தவறுதல்
சொல்லாத சொல் - தகாதசொல்
சொல்லாமற் சொல்லுதல் - குறிப்பாகச் சொல்லுதல்
சொல்லிக் காட்டுதல் - குத்திக் காட்டுதல், பாடம் ஒப்பித்தல்
சொல்லிக்கொள்ளுதல் - விடைபெறுதல், தாங்கிப் பேசுதல், இறந்து போதல்
சொல்லிவைத்தல் - முன்னறிவித்தல், கற்பித்தல்
சொல்வளர்த்தல் - செய்தியைப் பலருமறியச் செய்தல்
சொறிந்துகொடுத்தல் தூண்டுதல்
தகப்பன்சாமி - அடங்காப் பையன்
தக்கடி வித்தை - ஏமாற்று
தங்குதடை - தடுமாற்றம்
தடங்கோலுதல் - வழிசெய்தல்
தடபுடல் - ஆடம்பரம்
தடி போடுதல் - இடையூறு செய்தல்
தடிமாடு - கொழுத்தவன்
தடுத்தாட் கொள்ளுதல் - திருத்தி வசமாக்குதல்
தட்டல் தடவல் - முட்டுப்பாடு
தட்டழிதல் - நிலைகுலைதல், தோல்வியுறுதல்
தட்டிக்கழித்தல் - சாக்குப் போக்குச் சொல்லுதல்
தட்டிக்கேட்டல் - கண்டித்தல்

**தட்டிக்கொடுத்தல்**-தூண்டுதல், உற்சாகப்படுத்துதல்
**தட்டிச் சொல்லுதல்** - மறுத்துரைத்தல்
**தட்டிப் பறித்தல்** - அடித்துப் பிடுங்குதல்
**தட்டிப் பார்த்தல்** - மறையறிய முயலுதல்
**தட்டிப்போடுதல்** - மறுத்தல்
**தட்டியழைத்தல்** - போருக்கழைத்தல்
**தட்டிவிடுதல்** - ஊக்கப்படுத்துதல், தப்புதல்
**தட்டுக்கெடுதல்** - வறுமையால் நிலைகெடுதல்
**தட்டுண்டு போதல்** - தடைப்படுதல்
**தட்டுத் தடங்கல்** -தட்டுத்தடை
**தட்டுப்படுதல்** - தடுமாற்றம்
**தட்டுப் பறத்தல்** - திடீரென்று மறைதல்
**தட்டுமாறி** - ஏமாற்றுபவன்
**தட்டுமானம்** - தந்திரவழி
**தட்டுமுட்டு** - வீட்டுச் சாமான்
**தண்டத்துக் கழுதல்** - ஒன்றை ஒருபயனுமின்றிச் செய்தல்
**தண்டு மிண்டு** - மூர்க்கத்தனம்
**தண்டு வலித்தல்**-படகுத்துடுப்புத் தள்ளுதல்
**தண்ணீர் காட்டுதல்** - ஏமாற்றுதல், அலைக்கழித்தல்
**தந்தனப் பாட்டுப்பாடுதல்** - ஏழை போல் நடித்தல்
**தந்திதந்தியாய்** - வரிசை வரிசையாய்
**தப்பித்தவறி** - தவறுதலாய்
**தலை காட்டுதல்** - பலருமறிய வெளிவருதல்
**தலைகீழாய் நிற்றல்**-மிகச் செருக்குக் கொள்ளுதல்
**தலைக்கை தருதல்** - கையால் தழுவி அன்பு காட்டுதல்.
**தலைசாய்த்தல்** - கீழே படுத்தல்
**தலை தடுமாற்றம்**- பெருங் குழப்பம்.
**தலைதெறிக்க (ஓடுதல்)** - பொறி கலங்கும்படி.
**தலைத்தலை** - ஒவ்வொருவரும், இடந்தோறும்.
**தலைப்பாமாறி** - பெருமோசக்காரன்
**தலைமடங்குதல்** - கீழ்ப்படிதல்
**தலைமுழுகுதல்** - சம்பந்தம் ஒழித்தல், கைவிடுதல்
**தலைமுறை தத்துவமாய்** - பரம்பரை பரம்பரையாய்
**தலைமேற் கொள்ளுதல்** - பொறுப்பை ஏற்றல்
**தலையாட்டிப் பொம்மை** - எதற்கும் இணங்கி நடப்பவன்
**தலையிடுதல்** - காரணமின்றிப் பிறர் காரியத்திற் புகுதல்
**தலையெடுத்தல்** - மேனிலைக்கு வருதல்
**தவழ வாங்குதல்** - மிகுதியான வேலை வாங்கி வாட்டுதல்
**தவிடு பொடியாதல்** - பொடிப் பொடியாதல்
**தழுதழுத்தல்** - நாக்குழறுதல
**தளர்ந்துகொடுத்தல்** - இணங்குதல்
**தள்ளி வைத்தல்** - நாளொற்றி வைத்தல், விலக்கி வைத்தல்
**தறுக்கணித்தல்** - நிலைத்தல், பழங் கன்றிப் போதல்
**தன்னைக் கட்டுதல்** - போதியதாதல் செட்டாக நடத்துதல், தன்வயப்படுத்தல்
**தன்னந்தனி**-முற்றுந் தனிமையாய்

தாக்குப் பொறுத்தவன் - உடல் வலிமையுள்ளவன், பெரிய குடித்தனக்காரன்
தாங்கித் தடுக்கிடுதல் - மிகுந்த உபசாரஞ் செய்தல்
தாட்டுப் பண்ணுதல் - காலங் கடத்துதல், மறுத்தல்
தாண்டுகாற் போடுதல் - நூலில் இங்கொரு பக்கம் அங்கொரு பக்கமாகப் படித்தல்
தாம்புந் தோண்டியுமாதல் - மிக ஒற்றுமையாதல்
தாம்பூலமாற்றுதல் - திருமணம் உறுதி செய்தல்
தாம்பூலம் பிடித்தல் - நயவஞ்சகமாய்க் கெடுதி செய்யப் பார்த்தல்
தாம்பூலம் வைத்தல் - மறைவை வெளியாக்குதல், அழைத்தல்
தாரை வார்த்தல் - தொலைத்து விடுதல், தத்தம் பண்ணுதல்
தார்தாராய் - துண்டுதுண்டாக
தார்ப் பாய்ச்சுதல் - மூலைக் கச்சங் கட்டுதல்
தாலி பெருகுதல் - தாலிச்சரடு அற்றிறுகை
தாழ்த்து கொடுத்தல் - இணங்கிப் போதல்
தாளம் போடுதல் - வறுமையால் துன்புறுதல், விடாது கெஞ்சுதல்
தாளித்துக் கொட்டுதல் - புனைந்து கூறுதல், செருக்கிப் பேசுதல்
தாறுதாறாய்க் கிழித்தல் - சிறு துண்டுகளாகக் கிழித்தல்
தாறுமாறாய்ப் பேசுதல் - பிதற்றுதல், திட்டுதல்
தான்தோன்றி - செருக்குடையவன்

திக்குக் கெடுதல் - திசை தெரியாது மயங்குதல்
திக்கு முக்காடுதல் - மூச்சு முட்டுகை
திசைப்புரட்டன் - பெரும் பொய்யன்
திசையடித்தல் - நல்ல யோகம் அடைதல்
திட்டம் பண்ணுதல் - ஏற்பாடு செய்தல், அமைத்தல்
திட்ட வட்டம் - செவ்வை, ஏற்பாடு
திண்டாட்டம் - மனக்கலக்கம்
திண்டுக்குமுண்டு - எதிரிடைப் பேச்சு
தித்திக்கப் பேசுதல் - முகமனுகப் பேசுதல்
தித்திரிப்பு - புனைசுருட்டு
திமிர் பிடித்தல் - கொழுத்தல்
திமிலகுமிலம் - மகிழ்ச்சி மிகுதி
திமிறியடித்தல் - எதிர்த்துப் பேசுதல்
திராணி செலுத்துதல் - வேலையை நன்கு பார்த்தல், அதிகாரஞ் செலுத்துதல்
திருக்காப்பிடுதல் - கோயிற் கதவு மூடுதல்
திரைத்தவிர்தல் - விட்டு விட்டு ஒளிர்தல்
திரைத்துப் பாடுதல் - திரும்பத் திரும்ப நீட்டிப் பாடுதல்
திருநாடலங்கரித்தல் - நற்கதி அடைதல்
திருப்பூட்டு - மணமகளுக்குத் தாலி கட்டுகை
திறந்து பேசுதல் - மனத்தை விட்டுச் சொல்லுதல்
திறுதிறுத்தல் - அஞ்சி விழித்தல்
தின்னிமாடன் - மிதமிஞ்சித் தின்பவன்

தீட்டிப் பார்த்தல் - கல்வி முதலியவற்றைச் சோதித்தல்
தீரக்கழிய - மிக அதிகமாய்
தீவட்டிக் கொள்ளையடித்தல் - நெறிதவறிப் பொருள் திரட்டுதல்
தீவட்டித் தடியன் - பயனற்ற அறிவிலி
தீவாளியாதல் - கடனால் நிலைகுலைதல்
தீ விழித்தல் - பெருஞ் சினத்துடன் பார்த்தல்
துணி தாண்டுதல் - சத்தியம் செய்தல்
துணிந்து மணியங் கட்டுதல் - பிடிவாதமாயிருத்தல், ஊக்கத்தோடு முயலுதல்
துண்டு துடக்கு - சிறு துணுக்கு, தீண்டக் கூடாப் பொருள்
துண்டு துணியுமாக - துண்டு துணடாக
துண்டு விழுதல் - வேண்டிய அளவுக்குமேல் மிச்சப் பகுதி அமைதல், நட்டமாதல்
துப்புக் கெட்டவன் - அறிவற்றவன், அழுக்குப் பிடித்தவன்
துப்புத் துருப்பிடித்தல் - உளவு கண்டுபிடித்தல், விவரமாக விசாரித்தல்
துப்புரவாய் - முழுதும்
தும்பி பூதுதல் - வண்டுபோல ஒலித்தல், ஓசையோடு வலிந்து மூச்சுவாங்குதல்
தும்பு தட்டுதல் -நையப்புடைத்தல்
துரும்பு முறித்துப் போடுதல் - தடை யுண்டாக்குதல், பகை யுண்டாக்குதல்
துவசங் கட்டுதல் - எதிராளியாய் நிற்றல்
துள்ளத் துடித்தல் - மிகு துயரால் வருந்துதல்
துரட்டி போடுதல் - மறை பொருளை உசாவி யறிதல், தன் வயப்படுத்த முயலுதல்
துறைகாட்டுதல் - வழி காட்டுதல்
துறைபோதல் - நிரம்புதல், கற்றுத்தீர்தல், காரியம் முடிவு போதல்
துறை மாறுதல் - வழி தவறுதல்
தூக்கிப் போடுதல் - திடுக்கிடு மாறு செய்தல், சண்டை மூட்டுதல்
தூக்கியடித்தல் - வாங்கச் செய்தல், தோற்கச் செய்தல்
தூங்குமூஞ்சி - மந்தன்
தூண்டிக் காட்டுதல் - விவரித்தல், பிறன்செய்தகுற்றத்தை அவனிடம் குத்திக் காட்டுதல்
தூண்டிக் கொடுத்தல் - நினைப்பூட்டுதல், குறிப்பாக அறிவித்தல், கோட் சொல்லுதல் குற்றத்தை வெளியிடுதல்
தூண்டித் துருப் பிடித்தல் - நுணுகி ஆராய்தல்
தூண்டில் போடுதல் - உளவறிதல், தன்வயப்படுத்துதல்
தூர்வாருதல் - கிணற்று வண்டல்களை வாரியெடுத்தல்
தூவிவிடுதல் - செய்திபரப்புதல்
தூளிமட்டம் - தரைமட்டம்
தூள்படுதல் - தீவிரமாகக் காரியம் நடத்தல்
தூள்படுத்துதல் - முற்றும் அழித்தல், அட்டகாசம் பண்ணுதல்
தெந்தனமடித்தல் - வீணை திரிதல், வேலையை உழப்புதல்
தெப்பலங் கெட்டவன் - பலவீனன், உடல் வலிவற்றவன்

தெம்மாடி - அறிவீனன், ஒன்றுக்கு முதவாதவன்
தெரியத் தெரிதல் - தெளிவாயறிதல்
தெருமருதல் - மனஞ்சுழலுதல்
தெல்லடித்தல் - வஞ்சனை செய்தல்
தெள்ளத்தெளிதல் - மிகத்தெளிவாதல்
தெறிக்கப் பேசுதல் - நிதானமின்றிக் கடுத்துப்பேசுதல்
தெற்றென - விரைவாக, உடனே, தெளிவாக
தென்படுதல் - புலப்படுதல்
தேடியோடித் திரிதல் - பெருமுயற்சி செய்தல்
தேத்தாலடித்தல் - பலவிடத்தும் மலிவாக விற்றல்
தேய்ந்துமாய்ந்து போதல் - கவலையால் உடல் மெலிதல்
தொங்கல் விழுதல்-குறைவாதல்
தொடர்ச்சி பண்ணுதல் - வழக்கிடுதல்
தொடுபிடியாக - இடைவிடாமல்
தொடை தட்டுதல் - சண்டைக் கழைத்தல்
தொட்டகுறை - முற்பிறவியில் தொடங்கி விட்ட வினைக்குறை
தொட்டுத்தொட்டு - சிறுகச் சிறுக
தொண்ணுத்தல் - கெஞ்சி நிற்றல்
தொத்தி ஏறுதல் - அதிகாரம் காட்டுதல், பற்றி ஏறுதல்
தொப்பி போடுதல் - ஏமாற்றுதல், மயக்கிக் கேடு செய்தல்
தொய்யப் போடுதல் - ஒரு பயனுக்காகக் காரியத்தைச் சிறிது தாழ்த்துதல்
தொலைதூரம் - மிக்க தூரம்
தொன்று தொட்டு - அறுதி காலமாய்
தோப்புக் கரணம் போடுதல் - சொன்னபடியெல்லாம் நடத்தல்
தோள் கொடுத்தல் - உதவி செய்தல்
தோன்றக்கொடுத்தல் - போதுமானபடி கொடுத்தல்
நகையாடுதல் - பரிகசித்தல், சிரித்தல்
நச்சுப் பிச்சு - ஓயாத்தொந்தரவு
நடமாடுதல்-வழங்குதல், பரவியிருத்தல்
நடுச்சொல்லுதல் - நியாயஞ் சொல்லுதல், சான்றுகூறுதல்
நடுத்தெருவில் விடுதல் - ஆதரவின்றிக் கைவிட்டுப் போதல்
நட்ட நடுப்பெற - நடுமத்தி
நட்டமாய் நிற்றல் - அடங்காதிருத்தல்
நட்டா முட்டி - வஞ்சகம்
நட்டாற்றில் விடுதல் - ஆபத்தில் கைவிடுதல்
நட்டுக்கு நடுவே - நடுமத்தி
நண்டு நசுக்கு - சிறு குழந்தைகள்
நயந்து சொல்லுதல் - வேண்டிக் கொள்ளுதல்
நரிகுளிப்பாட்டுதல் - நயவார்த்தைகளால் ஏமாற்றுதல்
நருக்குப் பிருக்கல் - மசிந்ததும் மசியாததுமான அரைப்பு
நருநாட்டியம் - அளவுக்கு மிஞ்சின சுத்தம்
நருநாட்டியம் பேசுதல்-குற்றத்தையே குறிக்கொண்டு பேசுதல்
நல்லது சொல்லுதல்-அறிவுரை கூறுதல், வழியனுப்புதல

நழுநழுத்தல் - பிடிகொடாது பேசுதல்
நாக்குத் தவறுதல்-பொய்சொல்லுதல்
நாக்குத் தாளம் போடுதல் - உணவு கொள்ள விரும்புகை
நாக்குத் தெறிக்கப் பேசுதல் - பெரியோரை நிந்தித்தல்
நாக்கு நரம்பற்றவன் - அளவு கடந்து பேசுபவன்
நாக்கு நீளுதல் - அளவுகடந்து பேசுதல்
நாக்குப்புரளுதல்-சொல் தவறுதல்
நாக்கைப் பிடுங்கிக்கொள்ளுதல்-தவறு நடந்ததற்கு மிக்க வருத்தங் காட்டுதல், தன்னாலான முயற்சியை எடுத்துக் கொள்ளுதல்
நாடியைத் தாங்குதல்-இரத்தல்
நாடோடி - ஊர்சுற்றித் திரிபவன். (சாதாரண வழக்கிலுள்ளது)
நாட்செய்தல் - நல்லவேளையிற் காரியந் தொடங்குதல்
நாட்டுப்புறத்தான் - பட்டிக்காட்டான்
நாத்தழும்பேறுதல் - பலமுறை சொல்லுதலால் நாவுக்குப் பழக்கமுண்டாதல்
நாவடைத்துப் போதல் - பேச முடியாமற் போதல்
நாளடைவில் - நாள் செல்லச் செல்ல
நாளாவட்டத்தில் - நாளடைவில்
நாளுக்குநாள் - ஒவ்வொரு நாளும்
நாளோட்டுதல் - தாமதஞ் செய்தல், காலந்தாழ்த்தல்
நாள்தள்ளுதல்-காலங் கழித்தல்
நானாவிதமாய்ப் போதல் - பல வகையாய்ச் சிதறுண்டு போதல்
நிகண்டு பேசுதல் - எல்லாம் தெரிந்தாற்போற் பேசுதல்
நித்திரைதெளிதல் - உறக்கத்தினின்றும் நீங்குதல்
நிமிர்த்தி விடுதல் - நன்றாய்ப் புடைத்தல்
நிலைக்குத்துதல் - இறக்குந் தறுவாயில் விழி முதலியன அசைவின்றி யிருத்தல்
நிலைநாட்டுதல் (நிறுத்தல்) - தாபித்தல், ருசுப்படுத்தல்
நிலையாறுதல் - அமைதியுறுதல்
நிறுத்திப் பார்த்தல் - நிறை சோதித்தல், ஆலோசித்தல், ஒப்பிடுதல்
நின்றாற்போல் - திடீரென்று
நீக்குப்போக்கு - இணக்கமாயிருக்கை, மரியாதை, உதவி
நீச்சு நிலையறிதல்-உள்ள நிலைமையைச் சோதித்தறிதல்
நீட்டு முடக்கில்லாதவன்-ஏழை, உலோபி, குடும்பக் கவலையற்றவன்
நீலம்பற்றவைத்தல் - கதை கட்டுதல்
நீளத்தில் விடுதல்-தாமதித்தல்
நீறுபூத்த நெருப்பு - சினத்தை வெளிக்காட்டாதவன்
நுனிப்புல்மேய்தல் - மேலெழுந்தவாரியாகப் படித்தல்
நூல்போதல் - விதவையாதல்
நூறும்புகுதல் - நூறாண்டு வாழ்தல்
நெக்குருகுதல் - இளகுதல்
நெஞ்சு புண்ணாதல் - மனநோதல்

நெஞ்சைப் பிளத்தல் - துக்கம் முதலியன மனத்தை வருத்தல்
நெடுஞ்சாண் கட்டை, நெடுஞ் சாண்கிடை - தண்டா கார மாய்ப் பூமியிற் கிடக்கை
நெடும் போக்கு - மீளும்நோக்க மில்லாத செலவு
நெட்டுயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்
நெட்டுவிடுதல் - நெட்டை யாதல்
நெரிநெட்டி வாங்குதல் - நெட் டியை முறித்தல்
நெருக்கிப்பார்த்தல் - வற்புறுத் தல். முயற்சி எடுத்தல்
நெருக்கிப் பிடித்தல் -செட்டால் மிச்சம் பண்ணுதல்
நெல்லிக்காய் மூட்டை - ஒற் றுமையின்மை
நெளிப்புப் பேசுதல் - ஏளன மாகப் பேசுதல்
நெளியலெடுத்தல் - கோணல் நீக்குதல்
நெளிவு சுளிவு- ஏற்றத் தாழ்வு
நேரங்கெட்ட நேரம் - தகுதி யற்ற காலம்
நேரபார மறிதல் - அடக்க வொழுக்கமறிதல்
நேருக்கு வருதல் - இணங்கி வருதல்
நேர்கொடு நேரே - வெளிப் படையாக
நேர்ந்து போதல் -சம்பவித்தல்
நொடி சொல்லுதல் - புதுச் செய்திகூறுதல், பரிகசித்தல்
நொடித்துப் போதல் - நிலை குன்றுதல், கெட்டுப்போதல்
நொறுக்கித் தள்ளுதல் - நன்ரு யடித்தல், பெருஞ் சாமர்த்தி யம் காட்டுதல்
நொறுநாட்டியம் - அற்பக் குற் றங்களைக் காணுந்தன்மை
நோட்டம் பார்த்தல் - தகுதியறி தல், விலைமதித்தல்
நோட்டம் பேசுதல் - பிறர் தன் சொல்லுக்கு உடன் படும்படி பேசுதல்
பகுத்துப் பார்த்தல் - செவ்வை யாய்ச் சோதித்துப் பார்த் தல்
பக்கஞ் செய்தல் - ஒளிவிடுதல்
பக்கடுத்தல் - நொறுங்குதல்
பசையடித்தல் வழுவழுப்பாகப் பேசுதல்
பச்சைப்பச்சையாய்ப் பேசுதல் - வெளிப்படையாய்ப் பேசுதல்
பஞ்சப் பாட்டு - ஓயாது தன் ஏழைமையைக் கூறுஞ்சொல்
பஞ்சாய்ப்பறத்தல் - மிகு விரை வாய் நடத்தல், நிலைகுலைந் திருத்தல்
படங்கடித்தல் - பொய்யை மெய் போற் பேசுதல்
படாதுபடுதல் - மிகத் துன்புறு தல்
படாந்தரம் போடுதல் - முழுப் பொய் கூறுதல்
படிக்குப்பாதி - சரிபாதி
படிப்படியாய் - சிறுகச் சிறுக
படியப் பார்த்தல் - விலைகுறைத் தல், பலகைகளை இணைத்தல்
படிய வைத்தல் - ஊன்றுதல், அடங்கச் செய்தல்
படியளத்தல் - சீவனத்துக்குப் படி கொடுத்தல்
படுகிடை-தன் எண்ணம் நிறை வேறப் பிடிவாதமாகப் படுத் திருக்கை, நோய் மிகுதியால் எழுந்திருக்க முடியாத நிலை
படுக்கவைத்தல் - தோற்கடித் தல், அழித்தல்

படுநீலம் பற்ற வைத்தல் - குற்றத்தை இட்டுக் கட்டிச் சொல்லுதல்
படைத்து மொழிதல் -ஒன்றனை ஏறிட்டுச் சொல்லுதல்
பட்டுத் தரித்தல் - துன்பத்தைப் பொறுத்தல்
பட்டுத் தேறுதல் (தெளிதல்) - அனுபவத்தினாலறிதல்
பட்டுப் படிதல் - கட்டளைக்கு உட்படுதல்
பட்டுப்பட்டாவளி - பட்டு முதலிய விலையுயர்ந்த ஆடை வகைகள்
பட்டுப்பணிதல் -அனுபவத்தின் மேல் அடக்க முண்டாதல்
பட்டுப்போதல் - உலர்ந்து போதல், சாதல்
பட்டோலை கொள்ளுதல் - பெரியோர் கூறியதை எழுதுதல்
பட்டோலை போடுதல் - அட்டவணை எழுதுதல், மருந்துப் பட்டி எழுதுதல்
பட்டி முறித்தல் -கட்டுக் கடந்து போதல், கூட்டத்தை நீக்குதல்
பணி கொள்ளுதல் - ஏற்றுக் கொள்ளுதல்
பணிக்குச் சொல்லுதல் - குற்றங் கூறுதல்
பணித்துக் கட்டுதல் - தாழக் கட்டுதல்
பண்படுத்துதல் - செம்மைப் படுத்துதல், சீர்திருத்தல்
பண்பட்டவன் - கல்வி யறிவும் அனுபவமு முள்ளவன்.
பண்விடுதல் - நிலைகுலைதல்
பதம்பார்த்தல் - சோதனை செய்தல், சுவையறிதல்
பதனிடுதல் - தோல் முதலியவற்றை மெதுவாக்குதல்
பதி போடுதல் - பதுங்குதல், நாற்று நடுதல்
பதிவு வைத்தல் - கணக்கிற் பதிதல், வாடிக்கை வைத்தல்
பத்தி பாய்தல் - ஒளி வீசுதல், பிரதிபலித்தல்
பத்தும் பத்தாக - முழுமையாக
பத்தை கட்டுதல் - குற்றத்தை மறைக்க முயலுதல்
பம்பரஞ் சுற்றுதல் - அதிக வேலை வாங்குதல்
பம்பரமாட்டுதல் - அலைக் கழித்தல்
பருவம் பார்த்தல் - ஆழம் பார்த்தல், தக்க சமயம் பார்த்தல்
பரக்கப் பரக்கப் பார்த்தல் - அலமந்து விழித்தல்
பரதேசித் தபால் - ஊர்ப்பேச்சு
பரபரப்பு - விரைவுபடுதல்
பராபரியாய், பராபரிக்கையாய் - கேள்வி மூலமாய்
பல்லாண்டு - நீடு வாழ்க என்னும் வாழ்த்து
பல்லைப் பிடித்துப் பார்த்தல் - ஒருவன் திறனைப் பரிசோதித்தல்
பழம் பாக்கு வாங்குதல் - திருமணம் தீர்மானித்தல்
பழி கிடையாய்க் கிடத்தல் - தன் காரியம் நிறைவேற ஒருவன் வீட்டின்முன் உண்ணாமற் காத்துக் கிடத்தல்
பழி வாங்குதல் - தீமைக்குத் தீமை செய்தல்
பழுக்கப் போடுதல் ஒரு காரியம் முற்றுதற்குக் காத்திருத்தல்
பள்ளிக்கணக்கு - பள்ளிக்கூடப் படிப்பு
பற்காட்டுதல் - சிரித்தல், பல்லைக் காட்டிக் கெஞ்சுதல்

பற்றவைத்தல் பகை மூட்டுதல்
பாக்களவு - சிற்றளவு
பாக்கி சாக்கி - மிச்சம்
பாக்குக் கடிக்கு நேரம் - மிகக் குறுகிய காலம்
பாக்குப் பிடித்தல் - பிறனுக்குத் தீங்குண்டாகும்படி சூழ்ச்சி செய்தல், குறைத்துவிடுதல்
பாக்கு வைத்தல் - தாம்பூலம் வைத்து மணத்துக்கு அழைத்தல்
பாடுபடுதல் - மிக வுழைத்தல்
பாடு பழக்கம் - காரியமில்லாத பேச்சு
பாடு பறப்பு - கவலை
பாடு பார்த்தல் - தன் காரியம் கவனித்தல்
பாட்டில் விழுதல்-காலஞ்செல்ல விடுதல்
பாட்டு வாங்குதல் - வசவு பெறுதல், திட்டுப் பெறுதல்
பாணி மாறிக் கொட்டுதல் - தாளம் மாறிக் கொட்டுதல், முன்னிருந்த நிலைக்கு மாறுபடுதல்
பாய்ச்சல் காட்டுதல் - ஏய்த்தல்
பாரதூரம் - பெருந்தூரம், மூதன்மை, ஆழ்ந்த முன் யோசனை
பாரிபோதல் - நள்ளிரவில் சுற்றுக் காவல் செய்தல்
பால்பொழிதல் - செழிப்பாயிருத்தல்
பாழ்க்கிறைத்தல் - வீணாகக்காரியஞ்செய்தல்
பாறுபாறுக்குதல் - சிதைத்தல்
பான்மாறுதல் - பால்குடி மறத்தல், பின் வாங்குதல்
பிகு பண்ணுதல் தன்னை அருமைப்படுத்திக் கொள்ளுதல்
பிடுங்கல் பிடுங்கல், பிச்சுப்பிடுங்கல் தொந்தரை
பிசுபிசுத்தவன் - உலோபி, மந்தன்
பிஞ்சிற்பழுத்தல்- இளமையிலே முதிர்வடைதல், இளமையில் அறிவு பெருகுதல்
பிடித்துக் கொள்ளுதல் - சுளுக்குதல்
பிடித்த பிடி - கையினுற் கொண்ட பிடி, பிடிவாதமான கொள்கை
பித்துப் பிடித்தல் - பைத்தியமாதல்
பிட்டுக் காட்டுதல் - கூறுபடுத்தி விளக்கிச் சொல்லுதல்
பித்தலாட்டம் - ஒன்றை மற்றொன்றாகக் காட்டி வஞ்சிக்கை
பிரியக்கடை பண்ணுதல் - தன்னுடையதை அருமைப்பண்டமாக்கிக் கூறுதல்
பிரியாவிடை - உள்ளம் பிரியாதே விடை பெறுகை
பிறக்கடி யிடுதல் - நிலைகெட்டோடுதல்
பின்வாங்குதல் - பின்போதல், ஒப்பந்தத்தினின்றும் நெகிழ்தல்
புண்படுத்துதல் - மனம்நோவச் செய்தல்
புத்தப் புதிய, புத்தம் புதிய - மிகப் புதிய
புரட்டியடித்தல் - உண்மையை மறுத்தல்
புரட்டுருட்டு - மாறுபட்டமாகப் பேசுகை, தந்திரச் செயல்
புரிதிரித்தல் - கெடுக்க வழிதேடுதல்
புரிமுறுக்குதல் - கோட் சொல்லுதல்

புரியைக் கட்டியிழுத்தல் - துன் பப்படுத்துதல்
புருவநெறித்தல் - சினத்தால் புருவங்களை வளைத்தல்
புலம்பிடித்தல் - துப்புக் கண்டு பிடித்தல்
புலம் விசாரித்தல்-உளவறிதல்
புல்லரித்தல் - மயிர்க் கூச்செறி தல்
புழுகுணிக் கறுப்பன் - வெறும் பொய்யன்
புளிக்கரைத்தல் - கவலைப்படுதல்
புளிப்புக் காட்டுதல் - பயமுறுத் துதல்
புளிப்புத் தட்டுதல் - அருவருத் துப் பேசுதல்
புளிப்புவிடுதல் - பற்றுவிட்டுப் போதல்
புள்ளிக்காரன் - கணக்கன், பெயர் சொல்லாது குறிப் பிடப்பட்டவன்
புறக்கொடுத்தல் - தோற்றோடு தல், போகவிடுதல்
புறங்காணுதல் - முறியடித்தல்
புறங்கை நக்குதல் - வறுமை யாகுதல்
புறச்சுவர் தீற்றுதல் - உறவின ரைப் பாதுகாவாமல் பிறருக்கு விருந்து செய்தல், புறத்தே ஒழுங்கானவர்போல் நடித் தல்
புறமறிப்பார்த்தல் - நன்கு ஆராய்தல்
பூசி மெழுகுதல் - குற்றத்தை மறைக்கப் பார்த்தல்
பூச்சிகாட்டுதல் - அச்சங்காட்டு தல்
பூச்சிபிடித்தல் - வேண்டாத விடத்து மிகுந்த கருத்தோடு காரியஞ் செய்தல்
பூட்டழித்தல் -கட்டுக்குலைத்தல்
பூட்டுப்போடுதல் - பேச வொட் டாது தடைசெய்தல்
பூண்கட்டுதல் -பலப்படுத்துதல்
பூத்துப்போதல் - நீறுபடர்தல், கண்பார்வை மங்குதல்
பூராயமிடுதல் - நுணுகி ஆராய் தல்
பெயரப் பெயர - மீண்டும் மீண் டும்
பெயர்த்து எழுதுதல்-படி எடுத் தல், மொழிபெயர்த்தல்
பெயர் பொறித்தல் - புகழை நிலைநாட்டுதல்
பெருக்கெடுத்தல் - வெள்ளம் மிகுதியாதல்
பெருநிலை நிற்றல் - செய்து முடித்தல்
பெரும்பொன் படுதல் - தோற் றப் பொலிவுண்டாதல்
பெரும்போக்கு-பெருந்தன்மை, சாவு
பெருமாள் கோவில் மாடு - உடம்புகொழுத்தவன்
பேசாத பேச்சு - தகுதியற்ற சொல்
பேச்சுக் கொடுத்தல் -அருமறை யறிய வார்த்தை யாடுதல்
பேச்சு வளர்தல் - வாய்ச் சண்டை மிகுதல்
பேச்சு மூச்சில்லாமை - அமைதி அடங்கியிருக்கை
பேதிக்குக் கொடுத்தல் - அச்ச முண்டாக்குதல்
பைம்மறித்தல் - உட்புறத்தை வெளிப்புறமாக்குதல், பையின் வாயைக் கட்டுதல்
பையப்பைய - மெல்லமெல்ல
பொங்கல் வைத்தல் - அழித்தல்
பொடிவைத்தல் - தந்திரமாய்ப் பேசுதல், கோட்சொல்லு தல்

பொட்டுக்குலைதல் - மதிப்பிழத்தல்
பொட்டுப்பொடி - சிறுபண்டம்
பொதியவிழ்த்தல்- தன்வரலாறு விரித்தல்
பொதுவிலே விடுதல் - பொருளைப் பாதுகாவாது விடுதல்
பொத்தலடைத்தல் - குற்றத்தை மறைத்தல்
பொருட்படுத்தல் - மதிப்பிடுதல்
பொழிப்புப் பொழிப்பாய்ப் பேசுதல் - வசைப்பொருள் உள்ளடங்கப் பேசுதல், சுருங்கக் கூறுதல்
பொழுது போக்குதல் - சோம்பிக்கழித்தல், காலங்கழித்தல்
போகப்போக - காலம் செல்லச் செல்ல
போக்கிரி சாக்கிரி - கதியற்றவன்
போக்குக் காட்டுதல் - வழிகாட்டுதல், சாக்குச் சொல்லுதல்
போட்டடைத்தல் - திணித்தல்
போட்டு வைத்தல்-மீத்துவைத்தல்
போதாக்காலம் - கேடுகாலம்
போதாக் குறைக்கு - உள்ளது போதாதென்று
போது போக்கு - காலங்கழிக்கை
போனபோக்கு - மனஞ்சென்ற வழி, இழிவுநிலை
மகுடஞ் சூழ்தல் - கண்ணொளி மங்குதல், இறுமாந்திருத்தல்
மடங்கக் கூறுதல் - திருப்பக் கூறுதல்
மடங்கடித்தல் - தோற்கச் செய்தல்
மட்டந் தட்டுதல் - செருக்கடக்குதல்
மட்டம் போடுதல் - வேண்டுமென்று வேலைக்கு வராதிருத்தல்
மடையன் சாம்பிராணி - அறிவீனன்
மட்டுமரியாதை - தகுதிக்கேற்ற மரியாதை
மட்டையடித்தல் - வறுமையால் வருந்துதல், கேலி பண்ணுதல்
மட்டைவைத்துக் கட்டுதல் - ஒருவன் குறைவைத் தாங்கிப் பேசுதல்
மடையடித்தல் - தீர்மானமான விடைசொல்லுதல்
மணிக்கணக்கு கடிகாரப் படியுள்ள ஒழுங்கு
மண்டைக் கருவம்-மிகு செருக்கு
மத்திடுதல் - கடைதல்
மல்லுக்கட்டுதல் - கட்டாயப் படுத்துதல்
மழைவறங் கூர்தல் - மழை பெய்யா தொழிதல்
மனப்பால் குடித்தல் - கைகூடாதவற்றைப் பற்றி நெடுக எண்ணி அகமகிழ்தல்
மனம்போன போக்கு - சிந்தை சென்ற வழியே செல்லுகை
மன்றாடுதல் - குறையிரந்து வேண்டுதல்
மாட்டுக்காரப் பயல் - பயனற்றவன்
மாட்டுவித்தல் - அறியச் செய்தல், சேர்த்து வைத்தல்
மிகுத்துச் சொல்லுதல் - அழுத்திக் கூறுகை, விதந்து கூறுகை
மீக்கூர்தல் - அதிகமாதல்
முகங்கருகுதல் - சினத்தால் முகங் கன்றுதல்

முகங்கவிழ்தல் - நாண முதலியவற்றால் தலை குனிதல்
முகங் காணுதல் - கட்டி உடைவதற்கு முன் வாய்வைத்தல்
முகங்கொடுத்தல் - செவிசாய்த்தல், செல்லங் கொடுத்தல்
முகமுகமாய் - நேருக்குநேராய்
முகமுறிதல் - தாட்சணியமறுதல், மனநோதல்
முக்கிமுனங்குதல் - மனமின்மை காட்டி முணுமுணுத்தல், மிகத் துன்புறுதல்
முட்டிக் கொள்ளுதல் - பெருமுயற்சி எடுத்தல்
முறைத்துப் பார்த்தல் - ஏற விழித்து நோக்குதல்
முன்னுக்கு வருதல் - வளர்ச்சியடைதல், உயர் நிலையடைதல்
மூச்சுக்காட்டுதல் - ஆளரவஞ் செய்தல்
மூக்கில் வியர்த்தல் - முன்னடையாளந் தெரிதல்
மூக்கைச் சொறிதல் - எளிமை காட்டுதல்
மூச்சுப் பிடித்தல் - தீவிரமாக முயலுதல்
மூச்சுப் பேச்சு - உயிரிருக்குஞ் சாடை
மூடி வைத்தல் - மறைத்து வைத்தல்
மூரன் முறுவல் - புன்சிரிப்பு
மூலைக்குமூலை - சிதறுபட
மெய்ம்மறத்தல் - தன்னைமறத்தல்
மெனக்கெடுதல் - பயனின்றிக் கழிதல்
மேல்வரிச்சட்டம் - முன்மாதிரியாயமைந்தது
மேல்விழுதல் - வலியப் புகுதல், ஊக்கத்துடன் காரியத்தில் முந்துதல்
மேற்போட்டுக் கொள்ளுதல் - பிறனுக்காகப் பிணையேற்றல்
மொட்டையடித்தல் - முழுதுங் கொள்ளையடித்தல்
மொங்கான்வைத்தல் - ஏமாற்றுதல்
வகைசெய்தல் - ஏற்பாடு செய்தல், வழிசெய்தல்
வகைதொகை - விவரம்
வடக்கிருத்தல் - உயிர்துறக்குந் துணிவுடன் வடக்கு நோக்கி உண்ணாதிருத்தல்
வணங்காமுடி மன்னன் ஒருவருக்கும் பணியாதவன்
வத்திவைத்தல் - சண்டை மூட்டுதல், கோட் சொல்லுதல்
வம்பளத்தல் - அவதூறு பேசுதல்
வம்புதும்பு - வீண் பழிச்சொல்
வயிற்றிலடித்தல் - சீவனத்தைக் கெடுத்தல்
வயிற்றெரிச்சல் - பொறாமை
வரலாற்று முறைமை - பரம்பரையாகக் கையாளப்படும் அடிப்பட்ட வழக்கு
வரன்முறை - அடிப்பட வந்த முறை வரலாறு
வரையறை - எல்லை, அளவு, அடக்க வொடுக்கம், கண்டிப்பு, திட்டம், முடிவு
வலக்கையடித்தல் - உறுதி கூறுதல்
வலைவீசுதல் - வசப்படுத்தமுயலுதல்
வல்லடி வம்பன் - பலாத்காரத்தால் காரியத்தை முடித்துக் கொள்வோன்
வல்லாள கண்டன் - பேராற்றலுள்ளவன், மிக்க துணிவுள்ளவன்
வழிபார்த்தல் - உபாயந்தேடுதல்

வழிவழி - பரம்பரையாய்
வாக்கு வடிவு - வடிவழகு
வாக்கு வல்லபம் - பேச்சு வன்மை
வாட்ட சாட்டம் - தோற்றப் பொலிவு
வாய்க் கொழுப்பு - மதியாது பேசுகை
வாய்குளிரப்பேசுதல் - மேலுக்கு இனிமையாகப் பேசுதல்
வாய்போக்குதல் - எளிதில் வாக்குக் கொடுத்தல்
வாய்ப்பக் காட்டுதல் - விளங்க உணர்த்துதல்
வாய்ப்பூட்டு - பேசாமற்றடுக்கை
வாயடித்தல் - மருட்டிப்பேசுதல்
வாயில் மண் போடுதல் - கேடு விளைவித்தல்
வாயிலேபோடுதல் - எதுபேசினாலும் பேசவொட்டாது தடைசெய்தல், அபகரித்தல்
வாயைக்கட்டுதல், வயிற்றைக் கட்டுதல் - சிக்கனமாக இருத்தல்
வாய்வைத்தல் - சிறிது பயிலுதல், தலையிடுதல்
வாரம்பாடுதல் - பின் பாட்டுப் பாடுதல்
வாரி யிறைத்தல் - வீணாக்குதல்
வால் முளைத்தல் - சேட்டை செய்கை [தல்
வாலாட்டுதல் - சேட்டைசெய்
வால்முறுக்குதல் - தூண்டி விடுதல்
வாழையடிவாழை - இடையறாது தொடர்ந்துவரும் சந்தானம்
வானம்பறித்தல் - அஸ்திவாரம் தோண்டுதல்
வானம்பார்த்த பூமி - பாசன வழியில்லாது மழையால் விளையும் பூமி
விடியா மூஞ்சி - தொடர்ந்து வரும் துரதிஷ்டமுள்ளவன்
விடியா வழக்கு - ஒரு பொழுதும் முடிவுபெறாத வழக்கு
விடுத்து விடுத்து - அடிக்கடி
விட்டுக்கொடுத்தல் - இணக்கங் காட்டுதல்
விதிவிலக்கு - முறையினின்றும் நீக்குகை
விரல்வைத்தல் - குறும்பு செய்தல்
விருப்பு வெறுப்பு - வேண்டுதல் வேண்டாமை
விழத்தட்டுதல் - கீழே விழும் படி தள்ளுதல்
விழலுக்கிறைத்தல் - வீண் பாடுபடுதல
விழிகண்குருடு - புறத்தே விழியில் மாறுபாடின்றிக் கண் தெரியாமை
விழிபிதுங்குதல் - வேலை நெருக்கடியால் வருந்துதல்
விளக்கங் காணுதல் - ஆராய்ந்தறிதல்
விளக்கேற்றி வைத்தல் - நிலை நிறுத்துதல், வாழவைத்தல்
வீடும் விளக்குமாய் வைத்தல் - ஒருவனை வாழவைத்தல்
வீட்டோடுங் கூட்டோடும் - வீடுமுழுதும்
வீரம்பேசுதல் - தன் வல்லமையைத் தானே புகழ்தல், ஆண்மைத்திறங் கூறுதல்
வீற்றுவீற்றாக - வெவ்வேறாக
வெட்டிப் பேசுதல் - கண்டித்துப் பேசுதல்
வெட்டிப்பேச்சு - வீண்பேச்சு
வெளிகொடு வெளியே-பகிரங்கமாய்
வெளிச்சங்காட்டுதல் - வெளிக்கு ஆடம்பரமாய்த் தோன்றுதல்

வெளுத்து வாங்குதல் - மிக நன்றாகச் செய்தல்
வெள்ளையப்பன் - வெள்ளி நாணயம்
வெள்ளையுஞ் சள்ளையும் - வெண்மையான உடை
வெள்ளை வேட்டிக்காரன் - மாசற்ற ஆடையணிந்து சோம்பேறியாக இருப்பவன்
வெறுவாய்க்கிலே கெட்டவன் - ஒன்றுமில்லாத வறிஞன்
வெற்றிலைபாக்குக் கொடுத்தல் - மரியாதை செய்தல்
வேண்டாவெறுப்பு - விருப்பில்லாமை
வேலியழித்தல் - வரம்பு கடத்தல்
வேலை சாய்த்தல் - தொழிலை முடித்தல், அழித்தல், கொலை புரிதல்
வேலையினக்கெட்டவன் - வேலையின்றிச் சோம்பிருப்பவன்
வேலைமேற்போதல் - தன்வேலையைக் கவனிக்கப் போதல்
வேளாவேளை - சிற்சில சமயத்தில், உரிய காலத்தில்
வேளைப் பிசகு - தீயகாலம்
வேறு செய்தல் - பகை விளைத்தல்
வேறுநினைத்தல் - மாறுபாடாக நினைத்தல்
வேன் காணுதல் - அளவில் மிகுதியாயிருத்தல்

# இணைமொழி அகரவரிசை

அகமும் புறமும்
அகலாமல் அணுகாமல்
அடியும் நுனியும்
அடுப்பும் துடுப்பும்
அருமை பெருமை
அல்லும் பகலும்
அறம் மறம்
அன்றிலும் பேடும்
அன்றும் இன்றும்
ஆக்கமும் கேடும்
ஆங்காலம் போங்காலம்
ஆடல் பாடல்
ஆண்டான் அடிமை
ஆய்ந்து ஓய்ந்து
இகழ் புகழ்
இம்மை மறுமை
இயலும் செயலும்
இயற்கையும் செயற்கையும்
இளைத்துக் களைத்து
இறங்குபொழுது ஏறுபொழுது
இன்ப துன்பம்
ஈடும் எடுப்பும்
உடை நடை
உயர்வு தாழ்வு
உயிரும் உடலும்
உருட்டும் புரட்டும்
உருண்டு திரண்டு
உருவும் திருவும்
உள்ளது உரியது
உள்ளதும் இல்லதும்
உள்ளும் புறமும்
உற்றார் உறவினர்
ஊரும் பேரும்
எடுப்பாரும் பிடிப்பாரும்
எண்ணும் எழுத்தும்
எருக்கும் குருக்கும்
எலும்பும் தோலும்
ஏழை எளியவர்
ஏற்றடி இறக்கடி
ஒட்டி உலர்ந்து
ஒப்பாரும் மிக்காரும்
ஒப்பு உயர்வு
கட்டை நெட்டை
கண்டது கேட்டது
கண்டுமுட்டு கேட்டுமுட்டு
கண்ணீரும் கம்பலையும்
கப்பும் கவரும்
கல்லும் கரம்பும்
கல்வி கேள்வி
கற்பும் பொற்பும்
கனவோ நனவோ
காவலரும் ஏவலரும்
காவலரும் பாவலரும்
காலை மாலை
கீழும் மேலும்
குடியும் தடியும்
குணம் குறி
குலமும் குணமும்
குறைவு நிறைவு
குற்றுயிரும் கொலையுயிரும்
கேளும் கிளையும்
கையும் மெய்யும்
கொட்டு முழக்கு
கொண்டு கூட்டு
கொத்தடிமை குடியடிமை
கொப்பும் குழையும்
கொலையும் புலையும்
சட்டி பானை
சந்து சதுக்கம்
சாக்குப் போக்கு
சாவா மூவா
சீராட்டிப் பாராட்டி
சீரும் சிறப்பும்
சீறிச் சினந்து
சுற்றும் முற்றும்
சொல்லும் பொருளும்
ஞாயிறும் திங்களும்
தடுத்து மடுத்து

தடை விடை
தப்பும் தவறும்
தாயும் சேயும்
தும்பு தூசு
தோட்டம் துரவு
தோலும் எலும்பும்
நகமும் சதையும்
நகை நட்டு
நயமும் பயமும்
நரை திரை
நலம் பொலம்
நல்லார் பொல்லார்
நன்மை தீமை
நாடு நகர்
நாயும் பேயும்
நாளுங் கிழமையும்
நாளும் கோளும்
நிரந்து கலந்து
நுங்கும் நுரையும்
நைந்து பிய்ந்து
நொண்டி சண்டி
நோய் நொம்பலம்
நோவு நொடி
படியாதார் பண்டிதர்
பட்டி தொட்டி
பண்ணும் இசையும்
பயிர் பச்சை
பருந்தும் நிழலும்
பழக்க வழக்கம்
பாலும் தேனும்
பாவமும் பழியும்
பேரும் புகழும்
பொய்யும் புலையும்
பொய்யும் புனைசுருட்டும்
பொய்யும் வழுவும்
போக்குப் புகல்
போக்கும் வரவும்
போற்றிப் புகழ்ந்து
மணியும் ஒளியும்
மண்ணும் விண்ணும்
மண் மனை
மந்திர தந்திரம்
மப்பு மந்தாரம்
மயக்கம் தியக்கம்
மலரும் மணமும்
மலைக்கும் மடுவுக்கும்
முட்டி மோதி
முத்தி மோக்ஷ
முற்ற முடிய
மேடு பள்ளம்
யாழும் குழலும்
வற்றி வறண்டு
வாடி வதங்கி
வாய்க்கால் வரப்பு
வாழ்வு தாழ்வு
வானகமும் வையகமும்
விதி விலக்கு
விருப்பு வெறுப்பு
வினா விடை
வீடும் விளக்கும்
வேரும் தூரும்

# ஒலிக்குறிப்பாதிய தொடரகரவரிசை

கக்கக்
கச்சுப்பிச்சு
கசுமுசு
கடகட
கடுகடு
கணகண
கதகத
கபகப
கமகம
கரகர
கரட்டுக்கரட்டு
கலகல
கழுக்கு மொழுக்கு
களகள
கறகற
கறுகறு
கன்னங்கரேல்
கா
காச்சுப்பீச்சு
காச்சு மூச்சு
கிச்கிச்
கிடுகிடு
கிணுகிணு
கிணுக்குக்கிணுக்கு
கிண்கிண்
கிலுகிலு
கிளுகிளு
கிறிச்சுக்கிறிச்சு
கிறுகிறு
கீச்சுக்கீச்சு
கிர்கிர்
குணுகுணு
குதுகுது
குப்குப்
குமுகுமு
குய்யோமுறையோ
குலுகுலு
குவாக்குவாக்
குழகுழ
குழக்குக்குழக்கு
குளகுள
கேச்சுச்செச்சு
கெதங்கெதம்
கெத்துக்கெத்து
கொடுகொடு
கொளகொள
சடக்குச்சடக்கு
சடசட
சடுகுடு
சரட்டுச்சரட்டு
சலசல
சலுக்குப்பிலுக்கு
சளக்குப்புளக்கு
சளசள
சளபுள
சள்ளுப்பிள்ளு
சிடுசிடு
சிணுக்குச்சிணுக்கு
சிலீர்சிலீர்
சிளுசிளு
சிளுபுளு
சீத்துப்பூத்து
சிறுசிறு
சிறுபூறு
சுடுசுடு
சுரசுர
சுருசுரு
சுள்ளுச்சுள்ளு
செக்கச்செவேல்
டக்டக்
டபடப
டமடம
டாக்குமடக்கு
தகதக
தக்கடாபிக்கடா
தக்காபிக்கா
தக்குப்பிக்கு
தடதட
தத்தக்கபித்தக்க
தத்தபித்த
தபதப
தமதம
தறதற
தாட்டுப்பூட்டு
தாம்தோம்
திக்குத்திக்கு
திடீர்திடீர்
திடுக்குத்திடுக்கு
திடுதிடு
திண்திண்
திமிதிமி
துறுதுறு
தொணதொண
தொப்புத்தொப்பு
தொளதொள
நச்சுநச்சு
நசநச
நருநரு
நருபிரு
நளுநொளு
நறநற
நறுக்குப்புறுக்கு
நெருநெரு
நொணநொண
நொதுக்குநொதுக்கு
நொளுநொளு
நொறுநொறு
பகபக

| | | |
|---|---|---|
| பசபச | பொருபொரு | லைக்குலைக்கு |
| பச்சைப்புசேல் | பொலுபொலு | லவாலவா |
| படபட | மடமட | லொடலொட |
| பரபர | மடக்குமடக்கு | லொடுக்கு லொடுக்கு |
| பளபள | மதமத | வழவழ |
| பளாபளா | மலமல | வழுவழு |
| பளிச்சுப்பளிச்சு | மழமழ | வளவள |
| பறபற | மளமள | வறவற |
| பிலபில | மிடுமிடு | விண்விண் |
| பிலிபிலி | மினுமினு | விதுவிது |
| பிறுபிறு | மினுக்குமினுக்கு | விதுக்குவிதுக்கு |
| புலபுல | முசுமுசு | விருவிரு |
| பூத்துப்பூத்து | முணமுண | விறுவிறு |
| பூர்பூர் | முரமுர | வீர்வீர் |
| பொக்குப்பொக்கு | மூசுமூசு | வெச்சுவெச்சு |
| பொசுபொசு | மொகுமொகு | வெட்டுவெட்டு |
| பொடுபொடு | மொச்சுமொச்சு | வெடுக்குவெடுக்கு |
| பொத்துப்பொத்து | மொடுமொடு | வெடுவெடு |
| பொதுக்குப் பொதுக்கு | மொரமொர | வெதுவெது |
| பொதுபொது | மொலுமொலு | வெலவெல |
| பொரிபொரி | மொழுமொழு | வெள்ளைவெளேர் |
| | மொறமொற | வெளுவெளு |

# மக்கட்பெயர் அகரவரிசை

※

[தமிழ்மக்கள் தனித்தமிழில் தங்கள்
பெயர்களை அமைக்கத் துணைபுரிவது]

※

கிடைக்குமிடம்:

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

சென்னை-1 மதுரை-1 திருநெல்வேலி-6
கோயமுத்தூர்-1 கும்பகோணம்-1 திருச்சி-2

1979

தமிழ்ப் பாதுகாப்புக் கழக வெளியீடு : ௬

முதற் பதிப்பு : *மார்ச் 1951*
*மறுபதிப்புக்கள் : சனவரி 1957; திசம்பர் 1966; மே 1974; ஏப்பிரல் 1977; சூலை 1979.*

அப்பர் அச்சகம், சென்னை-1. (1/6)

# முன்னுரை

நந்தமிழ் மக்களின் பெயர்களெல்லாம் தமிழல்லாத பிறமொழிப் பெயர்களாகவும், பொருள்விளங்காப் பெயர்களாகவும் காணப்படுகின்றன. பழந்தமிழ் நூல்களில் வழங்கும் தமிழ்ப் புலவர், தமிழ்ப் பெருமக்கள் பெயர்களெல்லாம் வழக்கழிந்து போய்விட்டன. இப்போது வழங்கும் பெயர்களுள் நூற்றுக்கு ஒன்று கூடத் தமிழ்ப் பெயராகக் காணப்படவில்லையே !

'சரோஜினி,' 'ஜலஜாட்சி,' என்ற மகளிர் பெயர்களையும் '**விருத்தாச்சலம்,**' 'குஞ்சிதபாதம்,' என்ற ஆடவர் பெயர்களையும் வழங்குகிறோம். இவற்றின் பொருள் கற்றறி புலவர்களுள் ஒரு சிலர்க்கன்றி ஏனையோர்க்குத் தெரியாது என்பது திண்ணம். ஆனல், அவற்றிற்கு நேரான '**தாமரை நங்கை,**' '**தாமரைக் கண்ணி**', '**முதுகுன்றம்**', '**தூக்கிய திருவடி**', என்ற தனித் தமிழ்ப் பெயர்களைக் கேட்கும்போது எத்துணைப் பொருள் விளக்கமும் இனிமையும் உண்டாகின்றன. நிற்க.

நந்தமிழ் மக்கள் இனித் தங்கள் குழந்தைகட்குத் தனித்தமிழ்ப் பெயர்களை வைப்பதற்கும், பொருள் விளங்காமல் வழங்கிவரும் தம் பெயர்களை இப்போதே மாற்றிக்கொள்வதற்கும் இச் சுவடியிலுள்ள தனித்தமிழ்ப் பெயர் வரிசை பெருந்துணைபுரியும் பெயரை மாற்ற விரும்புவார் தம்பெயர்க்கு நேரான தனித்தமிழ்ப் பெயரைத் 'தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்'தினர்க்கு **விடைக் கடிதம்** எழுதித் தெரிந்துகொள்ளலாம். இதன்கண் இல்லாத பெயர்களும் திருத்தங்களும், அடுத்த பதிப்புக்கு நன்றியறிதலுடன், அன்போடு ஏற்றுக்கொள்ளப்படும்.

**தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| ௧. | மகளிர் பெயர் | ௫ |
| ௨. | ஆடவர் பெயர் | ௧௨ |
| ௩. | மகளிர் பிறமொழிப் பெயர்களும் நேரான தமிழ்ப் பெயர்களும் | ௨௩ |
| ௪. | ஆடவர் பிறமொழிப் பெயர்களும் நேரான தமிழ்ப் பெயர்களும் | ௨௩ |

## மக்கட் பெயர் அகரவரிசை

---

### க. மகளிர் பெயர்

அங்கயற்கணம்மை
அங்கயற்கண்ணி
அஞ்சலை
அஞ்சொல் நாயகி
அடிசிற்கினியாள்
அணிகலம்
அணிசடை
அணிமாலை
அணியிழை
அணிவளை
அந்தணி
அமிழ்தவல்லி
அமிழ்தமொழி
அமைதி
அம்மணி
அம்மாக்கண்ணு
அம்மாக்குட்டி
அம்மாத்தாய்
அரசநாயகி
அரசி
அரசிலம்மை
அரியநாயகி
அரிவை
அருஞ்செல்வி
அருட்பெருஞ்செல்வி
அருட்பெருநல்லாள்
அருமைச்செல்வி
அருமைமணி
அருளம்மை
அருளரசி
அருளி
அருளுடையம்மை
அருளுடையாள்
அருள்நங்கை
அருள்பொழிவிழி
அருள்மங்கை
அருள்மணி
அருள்மாது
அருள்வடிவு
அருள்வளர்நங்கை
அலர்மேன்மங்கை
அல்லி
அல்லிமலர்நங்கை
அல்லிமலர்நாயகி
அல்லியங்கோதை
அல்லிவாயம்மை
அழகம்மை
அழகரசி
அழகி
அழகியசடை
அழகியசெல்வி
அழகியநங்கை
அழகியமங்கை
அழகியலாள்
அழகியாள்
அழகுடைச்செல்வி
அழகுமுடியம்மை
அழகுமுத்து
அறச்செல்வி
அறத்திரு
அறத்திருநல்லாள்
அறத்திருமகள்
அறத்திருமங்கை
அறநல்லாள்
அறப்பாவை
அறப்பூங்கோதை
அறப்பெருஞ்செல்வி
அறப்பெருமங்கை
அறம்வளர்த்தநாயகி
அறம் வளர்த்தாள்
அறவல்லி
அறிவம்மை
அறிவு
அறிவுக்கண்
அறிவுச்செல்வி
அறிவுடைநங்கை
அறிவுடைமங்கை
அறிவுடையம்மை
அறிவுப்பூ
அறிவுப்பூங்கோதை
அறிவுநங்கை
அறிவுமங்கை
அறிவுமணி
அறிவுமலர்
அறிவொளி
அனிச்சம்
அனிச்சவடி
அன்பம்மை
அன்பு
அன்புக்கண்
அன்புடைநங்கை
அன்புடையம்மை
அன்புடையாள்
அன்புத்தாய்
அன்புநங்கை
அன்புமங்கை
அன்புமணி
அன்புமொழி
அன்புரு

அன்புவளர்நங்கை
அன்னக்கிளி
அன்னக்கொடி
அன்னத்தாய்
அன்னத்தூவி
அன்ன நங்கை
அன்னமணி
அன்னம்
அன்னம்மை
ஆடவல்லாள்
ஆண்டாள்
ஆதி
ஆதித்தமிழ்வளர்த்தாள்
ஆதிமகள்
ஆதிமந்தி
ஆதியம்மை
ஆய்வளை
ஆயிரங்கண்ணி
ஆயிரத்தாள்
ஆயிழை
ஆவுடைநாயகி
ஆவுடையம்மை
ஆழ்வாரம்மாள்
ஆளுடைநங்கை
ஆளுடையபாவை
ஆளுடையம்மை
ஆறுமுகத்தாய்
இசைத்தமிழாட்டி
இசைமாது
இசையமுது
இசையரசி
இயற்றமிழாட்டி
இயற்றமிழ் வளர்த்தாள்
இலங்கிழை
இளங்கண்ணி
இளங்கிளி
இளங்குயில்
இளஞ்சேய்
இளநகை
இளநங்கை
இளநிலா
இளந்தென்றல்
இளமங்கை
இளம்பிறை
இளம்பிறைக்கண்ணி
இளவரசி
இளவழகி
இளவன்னம்
இனிமை
இனியசெல்வி
இனியதாய்
இனியநங்கை
இனியமங்கை
இனியமொழி
இனியவடிவு
இனியாள்
இன்பவல்லி
இன்புரு
இன்மொழி
இன்னழகி
இன்னியலாள்
இன்னுரை
இன்னெழிலி
இன்னெழில்நங்கை
உண்ணாமுலை
உமையம்மை
உமையாள்
உயிர்த்துணை
உயிர்மணி
உலகத்தாய்
உலகநங்கை
உலகநாயகி
உலகமங்கை
உலகமுடையாள்
உலகமுழுதுடையாள்
உலகம்மை
உலகுடைத்தாய்
எழிலம்மை
எழிலி
எழிலியலாள்
எழிலுரு
எழில்வளர்நங்கை
ஏந்திழை
ஏரழகி
ஏலக்குழலி
ஏலவார்குழலி
ஏழிசையாள்
ஏழிசைவல்லாள்
ஏழுலகம்மை
ஐவணம்
ஒண்டமிழரசி
ஒண்டொடி
ஒப்பனை
ஒப்பனையம்மை
